# அறிவும் அறியாமையும்



ப்ரக்ருன்

# அறிவும்
# அறியாமையும்

ப்ரக்ருன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அறிவும் அறியாமையும் |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | தன்னாட்டம் |
| இரண்டாம் பதிப்பு | : | 2018 |
| வெளியீடு | : | பராபரம் |
| நூலின் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 137 |
| தாள் | : | A5 (5.83" X 8.27") |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அக விழிப்பு |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | மனித அறிவும், அதன் மகத்துவமும் | 17 |
| 2. | அன்றைய கல்வி அறிவும், அறிஞர்களும் | 34 |
| 3. | இன்றைய கல்வியும், இளைஞர்களும் | 52 |
| 4. | அறிய வேண்டிய அறிவு | 64 |
| 5. | மன நிறைவும், குறைவும் | 73 |
| 6. | பேச்சும், மூச்சும் | 78 |
| 7. | காலமும், தேசமும் | 86 |
| 8. | காலம் கடந்த வாழ்க்கை | 95 |
| 9. | மன அழுக்குகளும், நீக்கமும் | 109 |
| 10. | பிரம்மமும், பிரம்ம ஞானிகளும் | 124 |
| 11. | தேகமும், தேகியும் | 129 |

# முன்னுரை

ஒரே மனிதனுக்குள்ளேயே அறிவும், அறியாமையும் இருக்கின்றன. கொடுக்கப்பட்ட ஐம்புலன்களின் வாயிலாக, அவன் அடைகின்ற அனுபவங்கள் அறிவாக மாறி அவன் மனதில் சேகரிக்கப்படுகின்றது. அதன்பிறகு, அது அவனுடைய புத்தி சக்தியாக வெளிப்படுகின்றது.

உதாரணமாக, கண்கள் என்ற புலன் வழியாக, ஒரு காட்சியை காணும்போது, காணப்படுகின்ற அந்த காட்சியில் தெரிகின்ற ஒரு பொருளை, அந்த கண்கள் காண்பது மட்டுமே செய்கின்றது. ஆனால், அவ்வாறு கண்ட அந்தப் பொருளைப் பற்றிய ஒரு தெளிவை, புரிதலை புத்தி மட்டுமே, அது இன்னது என்று மனதிற்கு அறிவிக்கின்றது.

அதுப்போன்றே, நமது வாயில் ஒரு இனிப்பு பதார்த்தத்தை போட்டவுடன், அதன் சுவை இனிப்பா? துவர்ப்பா? கசப்பா? என்பதை நாக்கு என்ற புலன் சுவைத்தவுடன் எப்படி அறிகின்றது? அதை, மனம் ஏற்கனவே ஏற்றி வைத்துக் கொண்ட அனுபவத் தொகுப்பின் மூலம் உண்டான எண்ணத்தின் அடிப்படையில், புத்தியானது, அதை

**‘இன்னது’** என்று சரியாகத் தீர்மானித்து, அந்த சுவையை, **‘இனிப்பு’** என்று, அதே மனதிற்கு அறிவிக்கின்றது.

அதாவது, அந்த சுவை **‘இனிப்பு’** என்பது, மனதிற்கு எப்படித் தெரியும்? அது மனம் என்பது, நம்மிடம் உள்ள ஒரு புலனாகிய நாக்கின் மூலம் சுவைத்து அடைந்த அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்துக் கொண்டதா? என்றால், இல்லை! அப்படித் தெரிந்துக் கொள்ள வேண்டுமானால், அந்த நாக்கிற்கு அதை அறிந்துக் கொள்ளக்கூடிய **சுய அறிவு** கிடையாது.

பிறகு எப்படி நாக்கு என்ற புலன் அதை **‘இனிப்பு’** என்று அறிகின்றது?

மற்ற ஜீவராசிகளிடத்திலே உள்ள புறக் கரணங்களான **கண், காது, மூக்கு, நாக்கு, தோல்** என்ற ஐந்து புலன்களைக் கொண்ட ஐந்து அறிவுகளுக்கு மேலாக, மனிதனிடத்திலே உள்ள பிரத்யேகமான **‘ஆறாம் அறிவு’** என்று கூறப்படுகின்ற **“பகுத்தறிவு”** என்ற **“மனம்”** மிகவும் சிறப்பு வாய்ந்த புத்தி சக்தியாகக் கிடைத்திருப்பதினால் மட்டுமே, இவனை மனிதன் என்று அழைக்கப்படுகின்றது.

கண்கள், காதுகள் போன்ற ஐந்து புறக்கரணங்கள் மட்டும் மனிதனிடம் இல்லாமல், ஆறாவதாக **மனம்** என்ற இந்த

அந்தக்கரணம் மனிதனிடம் பல்வேறு எண்ணங்களின் தொகுப்பாக விரிவடைந்து, அதன் உயரிய பரிணாம வளர்ச்சியில் **புத்தி, சித்தம், அஹங்காரம்** மற்றும் **உள்ளம்** என்று நான்காக விரிவடைகின்றது.

அதிலே, ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் ஒட்டு மொத்த தொகுப்பாக சித்தம் திகழ்ந்தாலும், புத்தி, அவைகளை ஆராய்ந்து அதன் நன்மை, தீமைகளை பகுத்தறிவதினாலே, மனிதன் மற்ற ஜீவர்களிடத்தில் இருந்து உயர்வானவனாக மதிக்கப்படுகின்றான்.

இந்த புத்தி சக்தியின் உயரிய பரிணாமம் என்பது, அந்த அறிவை அறிவதில்தான் நிறைவடைகின்றது. அத்தகைய அதீத புத்தி சக்தியின் மதிப்பினால், மனிதன் மேலும், மேலும் அக ஆய்வுக்கு உட்படும்போது மட்டுமே, அதன் வளர்ச்சியின் காரணமாக, **'நான்', 'எனது'** என்ற அஹங்கார, மமகாரத்தில் இருந்து விடுபட்டு, உள்ளம் என்ற உயரிய தளத்தில் மனிதன் என்பவன் புனிதன் ஆக மாறுகின்றான்.

ஒரு குழந்தை பிறந்து, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடி எடுத்து வைக்கத் தொடங்கியவுடன், அதற்கு கொடுக்கப்பட்டுள்ள ஐம்புலன்கள் ஒவ்வொன்றாக செயல்பட ஆரம்பிக்கும்போது, அந்தக் குழந்தையின் தாய், தந்தை, உற்றார்,

உறவினர்கள், நண்பர்கள், மற்றும் ஆசிரியர்கள் போன்றவர்களின் வாயிலாக, அனேக விசயங்கள் அதே புலன்கள் வழியாக, அவன் மனதிலே எண்ணங்களாக ஏற்றி வைக்கப்பட்டு, அவனது சித்தத்தில் சேகரிக்கப்படுகின்றது.

ஒரு குழந்தை, தான் பிறந்த தேசத்தில் பேசப்படும் அதன் தாய் மொழியில் மட்டுமே முதன் முதலாக பார்க்கின்ற, கேட்கின்ற என புலன்களின் வாயிலாக அறிகின்ற அனைத்து பொருளின் தன்மையை, அதன் பெயராகவும், உருவமாகவும் மற்றவர்களின் மூலமாக அறிந்துக் கொள்கின்றது.

அதாவது, தனக்கு கொடுக்கப்பட்ட **கண், காது, முக்கு, நாக்கு, தோல்** என்ற அந்து புலன்களின் அறிவின் வாயிலாக, பல்வேறு எண்ணங்களாக மாற்றிக் கொண்டு, புத்திக்கு உரைக்கும் அந்த பொருட்களின் பெயரையும், உருவத்தையும், மனதின் மூலமாக, தனது சித்தத்தில் சேகரித்துக் கொண்டு, தேவைப்படும் பொழுது, மீண்டும், அதே புத்தியின் வாயிலாக அதை **‘இன்னது’** என்று வெளிப்படுத்துகின்றது.

அதாவது, கண்களினால் பார்த்தாலும், நாக்கினால் சுவைத்தாலும், காதுகளால் எதைக் கேள்விப்பட்டாலும், அதன் பெயரும், உருவமும் ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்ட

சித்தத்தின் தொகுப்பிலிருந்து, மனதின் வாயிலாக, புத்தியின் மூலமாக அது **‘இன்னது’** என்று அவைகளை அறிகின்றது.

இவ்வாறு, ஒரு சிறு குழந்தை வளர்ந்து பெரியவன் ஆகின்றவரை, பல்வேறு தகவல்களை தனது மனதில் உள் வாங்கிக்கொண்டு, ஏற்றப்பட்ட அவைகளின் பெயர்களையும், ரூபங்களையும், மற்றவர்களால் கற்றுக் கொடுக்கப்பட்ட விசயங்களாகவே சேகரித்து சித்தத்தில் வைத்துக் கொண்டு, தேவையான பொழுது, புத்தியில் வாயிலாக அறிந்துக் கொள்கின்றது.

மேலும், ஒரு உதாரணம் வாயிலாக, இதை தெளிவு படுத்திக் கொள்ளலாம். அதாவது, நாற்பது வயதை தாண்டிய ஒருவர் தான் வசிக்கும் பட்டணத்தை விட்டு, தன் பூர்வீக கிராமத்திற்கு முதன் முறையாகப் போகின்றார் என்று வைத்துக் கொள்வோம்.

அந்த கிராமத்தில் அவர் நுழைந்தவுடன், அந்த கிராமத்தை பற்றிய விரபங்கள், அனுபவங்கள் அனைத்தும் அவருக்கு புதியது. இந்த நிலையில் அந்த கிராமத்தில் வசித்து வருகின்ற அவரது உறவினர் ஒருவர் இவரை உபசரித்து, குடிப்பதற்கு ஒரு குளிர்பானம் கொடுக்கின்றார்.

அதைக் குடித்த இவருக்கு, இதுவரை அதுப்போன்று ஒரு பானத்தை அருந்தியதே கிடையாது என அவர் புத்தி கூறுகின்றது.

எனவே, அதன் சுவை, புளிப்பும், துவர்ப்பும், இனிப்பும் கலந்த கலவையாக, அவரது நாக்கு (புலன்) உணரப்பட்ட, சுவை அனுபவத்தின் வாயிலாக, அதன் பெயரை அறிய அவரது மனம் ஆவல் கொண்டு, அவரது உறவினரிடம் அதைப்பற்றி விசாரிக்கின்றார்.

இதுவரை, நான் இதுப்போன்ற ஒரு வித்தியாசமான சுவையுடன் பானத்தை அருந்தியது கிடையாது. இதன் பெயர் என்ன? எதனால், இது தயாரிக்கப்பட்டது? என்று கேட்கின்றார்.

அவரது உறவினரும், அது **'நார்த்தங்காய் சர்பத்'** என்று அதன் பெயரைக் கூறியதும். அவருக்கு ஏற்கனவே தன்னுடைய மந்தில் **நார்த்தங்காய்** என்ற ஒரு பழத்தைப்பற்றி அறிந்து வைத்துள்ளார். அவர் வசித்து வந்த பட்டணத்தில் காய்கறி கடைகளில் வாங்கி, அதைக் கார சுவையுடன் உப்பும், மிள்காய்தூளும் போட்டு தயாரித்த ஊறுகாய் சுவையை சுவைத்துள்ளார் என்பதினால், உடனடியாக அந்த பழத்தின் உருவம் அவர் நினைவுக்கு வந்து விடுகின்றது. அதுவே, அதை அவர் இனிப்பும், புளிப்பும் கலந்த சுவையில் இப்பொழுது

மட்டும்தான் முதன் முறையாக சர்பத்தாக குடிப்பதினால், அவருக்கு அது புதியது போன்று தோன்றியுள்ளது.

இனி, அந்த இனிப்பு சுவையை நாக்கு ருசித்ததும், அது நார்த்தங்காயால் செய்யப்பட்ட பானம் என்று, இவரது புத்தி நன்கு அறிந்துக் கொள்ளும்.

இதுப்போன்றே, புலன்கள் எதை சுவைத்தாலும், பார்த்தாலும், கேட்டாலும் அதைப்பற்றிய அனுபவம் என்பது, ஏற்கனவே சேகரிக்கப்பட்ட பெயர், உருவம் சார்ந்த அறிவை, **'புத்தி'** (மனம்) அறிந்திருந்தால் மட்டுமே கூற முடியும்.

இவ்வாறு, மனிதன் சிறு குழந்தை முதல், தற்பொழுது நடைப்பெறுகின்ற இன்றைய வயது வரை மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட அறிவினாலேயே அவனது மனதையும், புத்தியையும் வளர்த்துக் கொள்கின்றான்.

ஒரு முறை அந்தப் பொருளைப் பற்றிய **'அறிவு'** அவன் மனதிற்கு வந்து விட்டால், சில வருடங்கள் கழித்து அவைகளைப் பற்றி கேட்டாலும், அவனால், அதைச் சரியாகக் கூற இயலும்.

இவ்வாறு, ஏற்றி வைத்துக் கொண்ட புறக் கரணங்களான ஐந்து புலன் அறிவுகளால், மனிதனின் அதன் நல்லது, கெட்டதை அகக் கரணங்களான **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்** என்பதின் வாயிலாக பகுத்தறிந்து, ஒட்டு மொத்த எண்ணங்களாக இவனது மனம் நல்லதையும் சேகரிக்கின்றது, கெட்டதையும் சேகரிக்கின்றது. இதில், எது நல்லது, எது கெட்டது என்பது, இந்த மனதிற்குத் தெரியாது.

ஆனால், சேகரிக்கப்பட்ட தகவல்களை புலன்களின் மூலமாக அனுபவமாக்கும் பொழுது, அது நன்மையை கொடுக்கின்றதா? அல்லது தீமையைக் கொடுக்கின்றதா? என்பதை **'புத்தி'** செயல்பட்டால் மட்டுமே, அவைகளைப் பற்றிய அனுபவமாக அறிந்துக் கொள்ள முடியும்.

உதாரணமாக, குழந்தையின் தாய் எரியும் ஒரு மெழுகு வர்த்தியைக் காட்டி, இந்த மெழுவர்த்தியினால் வருகின்ற பிரகாசத்தின் காரணமாக, இந்த அறை முழுவதுமாக வெளிச்சம் உள்ளது என்று கூறுகின்றாள்.

மேலும், இந்த பிரகாசமான வெளிச்சத்திற்குக் காரணம் அந்த மெழுகுவர்த்தி வெளிப்படுத்தும் வெப்பத்தினால்தான் அந்த வெளிச்சம் என்ற ஒளி உண்டாகின்றது என்றும் எடுத்துக் கூறுகின்றாள்.

அந்தக் குழந்தையும் முதன் முதலாக **'பிரகாசம்', 'வெப்பம்', 'வெளிச்சம்'** என்ற புதிய வார்த்தைகளை கேட்கின்றது. அதற்கு வெளிச்சம் என்பதை, அந்த அறையின் பிரகாசத்தை வைத்து, கண்கள் (புலன்) வாயிலாக அறிந்துக் கொண்டது. அதே குழந்தைக்கு வெப்பம் என்ற வார்த்தைக்கு நேரடி அனுபவம் உண்டாகவில்லை. எனவே, அது அதன் அம்மாவிடம் **வெப்பம் என்றால் என்ன அம்மா?** என்று கேட்கின்றது.

அதன் அம்மாவும் மகனே! வெப்பம் என்றால் சூடு, நெருப்பு, எனவே அதைத் தொடாதே சுட்டு விடும் என்று எச்சரிக்கை செய்து விட்டு, அந்த இடத்தை விட்டு அவள் நகர்ந்ததும், அந்தக் குழந்தைக்கு, ஏற்கனவே, வெப்பம் என்பதற்கு விடை தெரியாமல் இருந்தது, இப்பொழுது அதன் அம்மா அதைப்பற்றி நெருப்பு, சூடு, சுட்டுவிடும் என்று, சில புதிய வார்த்தைகளை வேறு கூறி, அந்தக் குழந்தையைக் குழப்பி விட்டு விட்டாள்.

இனி, அந்தக் குழந்தை எப்படி அந்த வெப்பத்தை அறிய முடியும்?

ஒரு நாள் அவள் அம்மா இல்லாத பொழுது, அந்த எரியும் சுடரை தன் விரல்களால் தீண்டி, ***'சூடு'*** என்றால் எப்படி

இருக்கும், நெருப்பு என்றால் என்ன? என்ற ஒரு அறிவை, அதன் நேரடி அனுபவத்தை, தன்னுடைய **'தொடு உணர்வு'** என்ற **'தோல்'** என்ற புலன் வாயிலாக அனுபவம் அடைந்தது. இப்பொழுது, அந்தக் குழந்தைக்கு உண்டான அறிவின் மூலமாக, வெப்பத்தினால் வெளிப்பட்ட வெளிச்சம் **'நல்லது'** என்றும், அதைத் தொட்டவுடன் சுடுகின்ற சூடு **'கெட்டது'** என்றும், அதன் புத்திக்கு அனுபவமாகின்றது.

இதுப்போன்றே, ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய புலன்களினாலும், மற்றவர்களின் வாயிலாகவும் சேகரிக் கப்பட்ட அறிவையே, மனதில் ஏற்றி, சித்தத்தில் பதித்துக் கொண்டு, அவசியம் ஏற்படும் பொழுது, தன்னுடைய புத்தியினால், **'அது இன்னது'** என்ற அனுபவத்திற்கு கொண்டு வருகின்றான். இந்த அனுபவம் என்பது, அவனுக்கு உறுதி செய்யப்பட்ட நேரடி அறிவாகவும், சிலவற்றை விசாரித்து அறிந்துக்கொண்ட அனுமானிக்கப்பட்ட அறிவாகவும், தன் சித்தத்தில் சேகரித்து வைத்துக் கொண்டுள்ளான்.

உதாரணமாக, ஒரு மலைமீது புகை தெரிகின்றது. ஆனால், நெருப்பு கண்களுக்குத் தெரியவில்லை என்றாலும், அந்த புகை வருவதை வைத்து, அங்கு நெருப்பு இருக்கின்றது. அதனால், அது எரியும் பொழுது புகை வருகின்றது என்ற அனுமானத்தின் வாயிலாக, அந்த நெருப்பின் அறிவை

அறிகின்றான். இதுப்போன்றே, பல்வேறு விசயங்களும், மனிதனுக்கு, பிறந்தது முதல் தற்பொழுது வரை அறிவாக, அனுபவமாக அவன் மனதில் ஏற்றி வைக்கப்பட்டு, அதன் வாயிலாக அவன் புத்தி விரிவடைந்துக் கொண்டே செல்கின்றது.

இவ்வாறு ஏற்றி வைக்கப்பட்ட பல்வேறு எண்ணங் களின் தொகுப்பை இவன் **"அறிவு"** என்று எண்ணிக் கொள்கின்றான். இவ்வாறு, சித்தத்தில் சேகரிக்கப்பட்ட புலன் அறிவும், அனுபவ அறிவும், அவனது அன்றாட உலகியல் வாழ்க்கைக்கு வேண்டுமானாலும் மிகவும் உபயோகமாக இருக்கலாம். இருப்பினும், இந்த உலகியல் வாழ்க்கையைத் தூண்டிய இன்னொரு உன்னதமான வாழ்க்கை இதே பூ உலகத்தில் இன்னும் சிறப்பாக இருக்கின்றது. இதைத்தான் இவன் அறிய மறுக்கின்றான்.

காரணம், இவன் ஏற்றி வைத்துக் கொண்ட அறிவை அறிவு என்று எண்ணிக் கொண்டதினால், அவனது உண்மை இயல்பான அந்த பேரறிவை இவன் இழந்து விட்டான்.

அந்த பேரறிவுக்கு இந்த புலன்களின் வாயிலாக உண்டான, புலன்களின் அறிவும், அவைகளின் வாயிலாக சேகரிக்கப்பட்ட அனுபவ அறிவும், மேலும், இவன் புத்தியினால்

ஏற்றி வைக்கப்பட்ட புத்தகங்களின் அறிவும், என எதுவுமே இதற்குத் தேவை இல்லை. அந்த **'பேரறிவு'** நிலையான மகிழ்ச்சியை கொடுக்கக் கூடியது. இருமைகளற்றது. உயர் ஞானத்தைக் கொண்டது. உண்மையானது.

உலகோர் அனைவரையும் இனம், மொழி, நாடு, ஜாதி, மதம் என்ற பேதமைகளின்றி ஒன்றென இணைக்கக்கூடியது. இந்த உலகில் இருக்கின்ற புல், பூண்டு, கல், கரடு, மலை எனத் தொடங்கி, புழு, பூச்சி, எறும்பு, பாம்பு, பறவை, மிருகம் மற்றும் மனிதன் என எல்லா உயிர்களிடத்திலும் நிரந்தரமான **'இருப்பு'** உடையது.

மேலும், மனிதனின் கண்களால் (புலன்களால்) காண முடியாத, வெட்டவெளியில் மிதந்துக் கொண்டிருக்கின்ற இந்த மொத்தப் பிரபஞ்சத்திற்கு ஆதாரமாக இருக்கின்ற **'இருப்பு'** எதுவோ, அதனுடன் இரண்டறக் கலந்து, இணையில்லா பேரறிவுடன் இணைந்து வாழ்கின்ற வாழ்க்கை முறையைப் பற்றியே இந்த நூல் போதிக்கின்றது. கற்றுப் பயனடையுங்கள்.

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# 1. மனித அறிவும், அதன் மகத்துவமும்

அகண்ட அறிவாகிய பரவெளி என்ற வெட்ட வெளியானது தன் பரிபூரண ஒளியாகிய எல்லையற்ற அறிவுப் பிரகாசத்தை, அள்ளி வழங்கியதின் வாயிலாக வெளிப்பட்ட மிகப்பிரமாண்டமான இந்த பிரபஞ்சம் என்ற பேரண்டம் ஆறு அறிவு படைத்த மனித பிண்டத்தில் இருக்கிறது.

ஆனால், இதை எல்லோராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்குக் காரணம், அவர்கள் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களின் தொகுப்பாகிய, **"மனம்"** என்ற புற அறிவைக் கொண்டு, புத்தியினால் புரிந்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். அதனால், அவர்களால் இதுப்போன்ற பிரபஞ்ச ரகசியத்தை அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

அகண்ட அறிவாகிய அந்த **"வெட்டவெளி"** ஒன்றே எங்கும், எதிலும் **'இருப்பு'** கொண்டுள்ளதினால், இந்த பிரமாண்டமான பேரண்டம் என்ற **"பிரபஞ்சம்"** அதன்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது.

யாரால் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது? எவ்வாறு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது? என்றால், அது என்னால்தான் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. அதுவும் என்னுடைய ஏராளமான எண்ணங்களாகிய **“மனம்”** என்பதாகவே ஏற்றி வைக்கப் பட்டுள்ளது.

எப்படி?

நிறமற்ற கண்ணாடி ஸ்படிகம் அருகே, அழகிய செம்பருத்தி மலரைக் கொண்டு சென்று வைத்தால், அதன் சிகப்பு நிறம், அந்த நிறமற்ற கண்ணாடி ஸ்படிகத்தின் மீது பிரதிபிம்பித்து, அந்த நிறமற்ற பளிங்கு போன்ற ஸ்படிகம் சிவப்பு நிறத்தில் இருப்பதைப் போன்று காணப்படுகிறது.

அவ்வாறே, அகண்ட அறிவாகிய என் மீது, ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களாலாகிய தொகுப்பு **“மனம்”** என்று மாறி, அதனடிப்படையில் நாம, ரூபங்களில் சேகரித்தவைகளை சித்தம் என்பதில் இருத்தி, புத்தி என்பதின் மூலம் புரிந்துக் கொண்டு, அஹங்காரம் என்றவாறு வெளிப்படுத்தி, எப்பொழுதும், எதையாவது சிந்தித்தவாறு இந்த **‘மனம்’** வெட்டவெளியில் விரிந்துக் கொண்டே இருக்கிறது. ஆக, இந்த மனதின் விரிவே, மொத்த பிரபஞ்சத்தின் விரிவாகவும் இருக்கிறது.

பொதுவாக, மனதில் ஏற்றி வைக்கப்பட்ட புற அறிவைக்கொண்டு, மனிதன் மகத்தான அந்த பேரறிவை அறிந்துக் கொள்ள முடியாது.

அவ்வாறு உள்ள நிலையில், இந்த அகண்ட பிரம்மாண்டத்தை, அந்த வெட்டவெளியை அன்றைய ரிஷிகள், சித்தர் பெருமக்கள் எப்படி அறிந்துக் கொண்டார்கள்? அது அவர்களுக்கு மட்டும் எப்படி சாத்தியமானது?

அதுவும், இந்த பூமியில் இருந்துக் கொண்டே, எல்லையற்ற இந்த வெட்டவெளி, அதிலே மிதந்துக் கொண்டிருக்கிற இந்த பேரண்டம் என எல்லாவற்றையும் எவ்வாறு அறிந்துக் கொண்டார்கள்?

எல்லையில்லா அந்த அகண்ட அறிவை, அவர்கள் தங்கள் உள்ளத்தில் உணர்ந்துக் கொண்டதினால் மட்டுமே, அந்த எல்லையில்லா பரவெளியைப் பற்றி அவர்களால் அறிந்துக் கொள்ள முடிந்தது.

ஆனால், நாமோ இன்றைய விசய, சுகங்களைப் பெரிதெனக் கருதி, அவைகளைப் பற்றிய புற அறிவை 'அறிவு' என்று நினைத்து, ஏராளமான எண்ணங்களை ஏற்றிக் கொண்டு, **“மனம்”** என்னும் **‘மாயை’** பற்றி அறியாமல்,

அதிலேயே ஆனந்தம் இருப்பதாகக் கருதி, மனம் மயங்கி இருக்கிறோம்.

*"எதை அறிந்து கொண்டால், வேறு எதையும்*
*அறியத் தேவை இல்லையோ, அதை அறிவதே அறிவு!"*

என்ற இந்த தாரக மந்திரத்தை அன்றைய ரிஷிகளும், சித்தர்களும் அறிந்து வைத்திருந்தார்கள்.

அதைத்தான், நமது திருமூலரும் தமது திருமந்திரத்தில் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்.

"எல்லாம் அறியும் அறிவுதனை விட்டு
எல்லாம் அறிந்தும் லாபம் இங்கில்லை
எல்லாம் அறியும் அறிவை நானென்னில்
எல்லாம் அறிந்த இறை எனலாமே".

எல்லாம் அறிகின்ற அறிவை அறியாமல், மற்றவைகள் அனைதையும் **'அறிவு'** என்று கருதி, அவைகளை அறிந்துக் கொள்வதினால், அதில் இலாபம் ஒன்றுமில்லை. அதுவே, அந்த எல்லாம் அறியும் அறிவை அறிந்து, அதுவே, **"நான்"** என்று அறிந்துக் கொண்டவன், அனைத்தையும் அறிந்த இறைவன் ஆகிறான் என்கிறார்.

ஆக, அந்த இறைவனாக, எல்லையற்ற அறிவாக இருக்கும் என்னை **'நான்'** அறிய முடியாமல், என்மீது ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்களின் அறியாமைகள் காரணமாக, என்னை நான் அறிய முடியாமல் அவதிப்படுகிறேன்.

அதுவே, தக்க தருணத்தில் சாஸ்திரமும், சத்குருவும் எனக்கு கிடைக்கப் பெற்றால், அதன் வாயிலாக நான் என்னை அறிந்து, என் உண்மை சொரூபத்தின் உன்னதத்தை உணர்ந்து, அந்த **"இறைவ(என்)னை"** அறிந்துக் கொள்ள முடிகிறது.

என்னை எனக்கு அறிய விடாமல், மறைப்பது என் மீது எண்ணங்களாக ஏற்றி வைக்கப்பட்ட மனதின் அறியாமை அகலும் பொழுது, அந்த அகண்ட அறிவு பிரகாசிப்பதை என்னால் உணர முடிகிறது.

இதனை, பகவான் ரமணமகரிஷி பின்வருமாறு கூறுகிறார்.

அறியாமை விட்டு அறிவு இன்றாம்
அறிவு விட்டு அவ் அறியாமை இன்று ஆகும்
அந்த அறிவும் அறியாமையும் ஆர்க்கு என்று
அம் முதலாம் தன்னை அறியும் அறிவே அறிவு.

அவரது, இந்தப்பாடலின் மூலம் அறிவும், அறியாமையும் இரட்டைகள் என்றும், அவைகள், ஒன்றைவிட்டு ஒன்று தனித்து இருக்காது என்றும் கூறுகிறார்.

அதாவது, ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது இந்த அறிவும், அறியாமையும் என்கின்றார்.

ஆகவே, **அறிவு – அறியாமை** என்ற இந்த இரட்டைகள் பற்றி எல்லோரும் அவசியம் ஆராய்ந்து அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

இங்கே கூறப்பட்ட **அறிவு – அறியாமை** என்பவைகள், உலக இயல்பைப் பற்றி நமக்கு ஏற்படும் மெய், பொய் தோற்றங்களைப் பற்றிய அறிவேயாகும்.

இந்த இரட்டைகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதது மட்டுமின்றி, ஒன்று தோன்றும்போது மற்றொன்று தோன்றாது.

அதாவது, இருட்டை உணரும்போது, அங்கு வெளிச்சம் இருக்காது. அவ்வாறே வெளிச்சம் தெரியும் போது இருளை உணர முடியாது.

அதனால் ஒன்றைத் தெரிகிறது என்ற அறிவு இருக்கும் போது, மற்றொன்றைத் தெரியவில்லை என்ற அறியாமையும் கூடவே இருக்கும்.

அறிவில், அறியாமை கலந்திருக்கிறது.

அறியாமையில், அறிவு கலந்திருக்கிறது.

அறியாமையில், அறிவுக்கலப்பு இல்லை என்றால், தெரியவில்லை! என்று (கூடச்) சொல்ல முடியாது.

ஜடம்போல்தான் இருக்க வேண்டியதாகிவிடும்.

ஆகவே, இரட்டைகளின் கலப்பினால், தூய்மையற்ற ஒன்றை அறிவென்று கூறமுடியாது.

அதனால், அறிவு என்பதும், அறியவில்லை என்பதும் ஆகிய இரண்டும் அறியாமைகளே என்பதினால், நாம் அறிவு என்று ஏற்றி வைத்துக் கொண்டுள்ள எண்ணங்களே நமக்கு அறியாமைகள் என்பதாக இருக்கிறது.

அவ்வாறு, ஏற்றி வைக்கப்பட்ட புற அறிவிற்கும், அதனால் உண்டான அறியாமைக்கும் முக்கியக் காரணம் அகந்தை என்ற ஆணவம் இருப்பதினால்தான் இந்த இரட்டைகள் இருக்கிறது.

அதுவே, அந்த அறிவும், அறியாமையும் யாருக்கு? என்று மனதை விசாரித்து பார்க்கின்ற பொழுது, அது **“எனக்கு”** என்று மனம் அறிந்துக் கொள்ளுமானால், அவ்வாறு கூறுகின்ற மனம்தான் அந்த அஹங்காரத்திற்கு ஆதாரமாக இருக்கிறது என்பதையும் எளிதாக அறிய முடிகின்றது.

ஆக, அந்த அகந்தையை அறிவது என்பதும் கூட, அப்படி ஒன்று தன்னிடத்தில் இல்லவே இல்லை என்பதை அறிபவன் எவனோ? அவனே அதையும் அறிகிறான். அவ்வாறு தன்னை யார்? என்று அறிகின்ற அவனே அந்த அகந்தையை இழக்கிறான்.

ஆம்! அந்த மனம் எங்கு உதிக்கிறதோ, அங்கேயே ஒடுங்கும் பொழுது, அங்கு அகந்தை அழிந்து, ஆனந்தம் உண்டாகிறது. அந்த ஆனந்தத்தினால், அறிவு பிரகாசம் வெளிப்படுகிறது.

அவ்வாறு தன்னை அறியும் அறிவே உண்மை அறிவு. அந்த உண்மை அறிவே நம்முடைய "உணர்வு" என்று அதை நம் உள்ளத்தில் உனர்ந்துக் கொள்ள வேண்டும்.

ஆக '*இருப்பது அது மட்டுமே. அதை விடுத்து, அதற்கு வேறாக அறிவதற்கு ஒன்றுமில்லை!*' என்ற இந்த அறிவை அடைந்தவனுக்கு, இனி அடைவதற்கு ஒன்றும் இல்லை.

ஆனால், அறியாமையில் சிக்கிக் கொண்ட மனிதனோ, தனது ஐம்புலன்களினால் அறியக்கூடிய இந்த உலகப் பொருட்களை அறிவதையே **"அறிவு"** என்று நினைக்கிறான்.

அந்த அறிவும், அதற்கு அயலான அறியாமையும், ஆகிய இரண்டுமே தோன்றுவதற்குக் காரணம் தனக்கு **"அறிவு"** என்று ஒன்று இருப்பதினால்தான் என்பதையும் அறிய மறுக்கிறான்.

அதாவது, **“நான் யார்?”** என்று, தன்னைப் பற்றி அறிய முடியாத அறியாமை, தன்னிடம் இருக்கிறது என்பதை அறிவதே அந்த அறிவுதான் என்பதையும் அறிய மறுக்கிறான்.

அதாவது, அந்த அறிவு தன்னை விட்டு, தனக்கு வேறான இந்த உலகையும், உலகப்பொருட்களையும் அறிவதிலேயே அதிக ஆர்வம் கொள்வது ஏன்? என்று சிந்திக்க மறுக்கிறான்.

அதாவது, அனைத்தையும் அறியும் அறிவு உண்மையா? அல்லது என்னால் அறியப்படுகின்ற இந்த உலகம் உண்மையா?

இந்த இரண்டில் எது முதன்மையானது?

இந்த கேள்வியை கேட்டு எவன் ஒருவன் தன் மனதை விசாரிக்கின்றானோ, அவனே தன்னை அறிகிறான்.

அனைத்தையும் அறியும் அறிவாகிய தன்னை விடுத்து, தனக்கு வேறான இந்த உலகையும், உலக விவகாரங்களையும் அறிவது என்பது அறியாமையினால் அல்லவா?

ஆக, தனக்கு வேறாக உள்ள அன்னியப் பொருட்களை அறியும் அறிவு, மெய்யறி என்று எப்படிக் கூற முடியும்?

அதாவது, தான் ஒன்றை அறிவதற்கோ, அல்லது தன்னை அறிவிப்பதற்கோ, தனக்கு அன்னியமாக மற்றொரு

பொருள் இல்லாமல், தானே சுயமாக பிரகாசிப்பதால், தன்னில் தானாய் தன்னை அறிகின்ற அந்த ஆன்மாவே, உண்மை **"அறிவு"** என்று அறிந்துக் கொள்வதே "ஆத்ம ஞானம்" எனப்படுகிறது.

இதைத்தான் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார்.

அநந்யாஸ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே |
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகச்க்ஷேமம்
வஹாம்யஹம் ||
(9–22)

*"எனக்கு அன்னியர் அல்லாராய் என்னையே நினைத்து, எப்பொழுதும் என்னையே உபாசிக்கும், நித்திய யோகிகளுடைய யோகச் க்ஷேமத்தை நானே வழங்குகிறேன்"* (9–22)

என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுவதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஒரு பக்தன் இறைவன் வேறு, தான் வேறு என்று, இருமைகளில் சிக்கியபடி, துவைத பேதத்தில் வழிபட்டான் என்றால், இறைவனுக்கு வேறாக உள்ள பக்தனாகிய இவனைப் போன்றே இன்னும் பலவும் இருக்கிறது என்பதாகிவிடும்.

இதனால், இவன் (பக்தன்), இறைவனுக்கு வேறாக இருப்பதுப் போன்றே, இன்னும் அநேக வஸ்துக்கள் இருக்கக்

கூடும். அதனால், அவைகளில் ஏதேனும் ஒன்று, ஒரு நாள் இறைவனையே மிஞ்சக் கூடிய சக்தியைப் பெற்றுவிட்டால், அதனால், இறைவனின் வைபவம் பாதிக்கப்படும். அதன் காரணமாக, இறைவனுக்கு வேறாக ஒரு சக்தி தோன்றி, இறைவனை ஜெயித்து விட்டால், அந்த ஏக இறைவனை, **“இறைவன்”** என்று போற்றி அழைக்க முடியுமா? அதற்கு அவசியம் இல்லாத ஒரு நிலை உருவாகிவிடும்.

ஆகவே, அந்த ஏக இருப்பாகிய இறைவன் எப்படிப்பட்டவன் என்பதை அறியாமல், ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால், மனதில் கற்பிதம் செய்துக் கொண்டு, அந்த உருவத்தில் இறைவன் இருக்கிறான், இந்த உருவத்தில் இறைவன் இருக்கிறான் என்று சண்டைகள் இடுவதும், இதிலே, இந்த இறைவன் உயர்ந்தவன், அந்த இறைவன் தாழ்ந்தவன் என்று, இறைவனைப் பிரித்துப் பார்க்கின்ற, பகுத்தறிவற்ற மனிதனுக்கு பகவத்கீதை போன்ற உயர் உபதேசங்கள் விளங்குவதில்லை.

கீதையில், பகவான் ஸ்ரீகிருஷ்ணர் **“எனக்கு அன்னியர் அல்லாராய் என்னையே”** என்று கூறியிருப்பது இறைவன் ஒருவனே என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அதுமட்டுமின்றி, அத்தகைய ஏக இறைவனாக நானே இருக்கிறேன் என்று, அந்த இறைவனுக்குள் நானும், என்னுள் அவனும் என இருக்கும் பொழுது, அவனுக்கு அன்னியமாக வேறு எதுவும் கிடையாது. தன்னுள்ளே எல்லாமாய் இருக்கிறது என்று அறிவதே ஆத்ம ஞானம் எனப்படுகிறது.

அவ்வாறு இருந்தால் மட்டுமே, ஆத்ம சாதகனுக்குத் ‘தன்னுள் ஒளிறும் ஆன்மாவே’ **“நான்”** என்ற அறிவும், அந்த பரமா(ஆ)ன்மா தவிர வேறு எதுவுமே இங்கு இல்லை என்ற தெளிவும் உண்டாகும். அத்துடன், அனைத்தையும் அறிகின்ற அறிவாகவும், அந்த ஒரே பேரறிவு மட்டுமே இருக்கின்றது என்பதுவும் புலனாகும்.



இதையே திருமூலரும், தமது திருமந்திரத்தில்,

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தன பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தன பார்முதல் பூதமே.

மரத்தால் செய்யப்பட்ட மிகப் பெரிய மதயானை உருவம் சிற்பியின் திறமையால், வெளிப்பட்டவுடன், பார்க்கின்றவர்களின் பார்வைக்கு அங்கு உண்மையான யானை நிற்பது போன்று இருக்கிறது.

இதற்குக் காரணமான மூலப்பொருள் **‘மரம்’** அங்கு மறைக்கப்படுகிறது. அதாவது, மரத்தை மறைத்து, பார்வைக்குத் தெரிவது **“யானை”** மட்டுமே. அதுவே, யானை உருவத்தை நீக்கி, அதற்கு ஆதாரமாக மரம் இருப்பதைக் கவனித்தால், அந்த யானையின் உருவம் உண்டானது, சிற்பியினால்தான் என்பது புரியவரும்.

அவ்வாறே, சாதாரண கண்களால் காணக்கூடிய இந்த பிரபஞ்சம் பரம(எ)ன் திறமையால் உண்டானது. ஆனால், பார்ப்பவர்களின் பார்வைக்கு இந்த உலகம் உண்மையாகவே இருப்பதுப்போன்று தோன்றுவதற்கு காரணமான மூலப் பொருள் **‘பரம(நா)ன்’** மறைக்கப்படுகிறது.

அதாவது, பரம(என்)னை மறைத்து, பார்வைக்குத் தெரிவது இந்த உலகம் மட்டுமே. அதுவே, இந்த உலகத்தை நீக்கி, அதற்கு அதாரமான பரம(என்)னை மட்டும் கவனித்தால், பிரபஞ்சம் உண்டானது பரமனி(எ)ன் திறமை என்பது புரிய வரும்.

ஆகவே, இந்த உலகப்பொருட்கள் அந்த **‘பரம்பொருள்’** (அறிவு) மீது ஏற்றிவைக்கப்பட்டு, அதன் உண்மைத் தன்மையை அறிய முடியாதவாறு **‘மாயை’** (மனம்) மறைக்கிறது.

அதுவே, இந்த உலகத்தை (மனதை) நீக்கி, பரம(என்)னை (அறிவை) மட்டும் கவனித்தால், இந்த உலகம் அந்த அறிவின் திறமையால் வெளிப்பட்டது என்பது தெரியவரும். இந்தத்தெளிவு தன்னையறிந்த தத்துவ ஞானிகளுக்கு தடுமாற்றம் இல்லாமல், திடமாக இருக்கும்.

அதுப்போன்ற அறிவு மற்றவர்களுக்கு இருக்காது. அதாவது, அறிஞன் தன்(பரம)னை அறிவாக அறிந்துக் கொண்டதினால், உண்மையை அவனால் உணர முடிகிறது.

அதுவே, மற்றவர்கள் தன்னை மனமாக நினைத்து மயங்குவதால், மரத்தைக் கண்டு யானை என்றும், உலகத்தைக் கண்டு உண்மை என்றும் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் உலறிக் கொண்டிருக் கிறார்கள்.

மகத்தான ஆறாவது அறிவு மனிதனுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டும், அதன் பயன் பள்ளியில் கற்பதாலும், பல புத்தகங்களைப் படிப்பதாலும், பலர் கூறக் கேட்பதாலும் வளர்ந்து விடும் எனக் கருதி, மேலும், மேலும் அனேக எண்ணங்களை மனதினில் ஏற்றிக் கொண்டே இருக்கும் இவர்கள், என்றுமே அந்த ஏக இறைவ(தன்)னை அறிய முடியாது.

இதனைத்தான் தாயுமானவர் தமது பாடலில் மிக அழகாக தெளிவுபடுத்துகிறார்.

“சினமிறக்க கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும்,
மனம் இறக்க கல்லாற்கு வாயேன் பராபரமே!” என்கிறார்.

அதாவது, வீணாக ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களை, அதாவது விசய, சுகங்களை **“அறிவு**” என்று அறிந்து வைத்துக் கொண்டிருக்கிற வரையில், அரிதான இந்த மனிதப் பிறவி கிடைத்தும், அதன் மகத்துவம் அறியாமல், அறியாமையினாலே மனதிலிருந்து விடுதலைப் பெற முடியாமல், அதன் ஆசைகள் காரணமாக அனேக பிறவிகளை எடுத்து, பிறப்பு – இறப்பு என்ற பெருங்கடலில் நீந்த முடியாதவாறு அலைக்கழிக்கப்படுகிறான் என்பதை வள்ளுவப் பெருந்தகை தமது திருக்குறளின் வாயிலாக எடுத்துக் கூறுகிறார்.

‘பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - நீந்தார்
இறைவனடி சேராதார்’. என்கின்றார்.

ஆகவே, சிறு வயதிலிருந்து ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களை விசாரித்து, அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து, அதில் உள்ள நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து, அத்தகைய எண்ணங்களை முறைப்படுத்துகின்ற பொழுது, அந்த மனிதன் மனதின் மாயையில் இருந்து தன்னை

விடுவித்துக் கொள்கிறான். அவ்வாறு அவன் மனதிடமிருந்து அடைகின்ற அந்த விடுதலைக்குத்தான் **“வீடுபேறு”** என்று நமது தர்மம் உபதேக்கிறது.

அதாவது, மனிதனின் வாழ்வியல் நெறிகளாக நம் முன்னோர்கள் வகுத்துக் கொடுத்த அறம், பொருள், இன்பம், வீடு என்பதை ஒவ்வொருவரும் முறையாக வாழ வேண்டும்.

அவ்வாறு முறையாக தர்ம வழியில் வாழுகின்ற பொழுது, அந்த அகண்ட அறிவை அடைந்து, அனைத்திலும் அந்த ஏக இறைவனை அறிந்து ஆனந்தமாக வாழ முடியும் என்பதை எடுத்துக்கூறவே, நம் சனாதன தர்மத்தின் வாழ்வியல் நெறிகளை நமக்கு வகுத்துக் கொடுத்தனர்.

ஆனால், இன்றைய கல்வி முறையிலே, அதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்படவில்லை. கற்றதினால் ஆன பயனைக் கண்கூடாக நாம் இன்று கண்டு வருகிறோம். மனிதர்களிடையே ஒன்றுமை இல்லை. மனித நேயம் இல்லை. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லை.

காரணம், பாலப் பருவத்தில் பள்ளிகளில் சேர்த்து கல்வி கற்க ஆரம்பிக்கும் பொழுதே, அவனை விட இவன் நன்றாக

படிக்க வேண்டும் என்ற பொறாமை குணம், மற்றவன் மீது வெறுப்பு குணம் போன்றவைகள் கட்டாயமாக்கப்படுகின்றன.

கற்கின்ற ஒவ்வொருவருக்கும் **காசேதான் கடவுளடா!** என்பதுப் போன்று கற்பிக்கப்படுகின்றன. தூய்மையான மனதை வளர்த்த வேண்டிய ஆரம்ப பாடங்கள் நீக்கப்பட்டு, மனதை மயக்கும் பாடங்கள் அதிகம் புகுத்தப்பட்டுள்ளன.

இது எதிர்கால மனித சமுதாயத்திற்கு மிகப்பெரிய சரிவு உண்டாக்கும் என்பதை எவருமே அறியத் தயாராக இல்லை. எல்லோருமே அவரவர்கள் குழந்தையை ஆங்கிலத்தில் பேச வைத்து, வெளி நாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்றுதான் எதிர்ப்பார்க்கிறார்கள்.

யாருக்குமே தாய் நாடு மீது அணுவளவும் தேசப்பற்று இல்லை. பலரும் பல்வேறு வலிகளுடன் வாங்கிக் கொடுத்த சுதந்திரம், சுகமாக மட்டுமே இருப்பதினால், அந்த சுத்த அறிவை அறியக்கூடிய ஆர்வம் யாருக்கும் இல்லை.

## 2. அன்றைய கல்வி அறிவும், அறிஞர்களும்

இன்றைய மாணவர்களிடம் **“அறிவு”** என்ற வார்த்தைக்கு தவறாக பொருள் கூறப்பட்டு, அவர்களது மனதில் அதைப்பற்றிய தவறான எண்ணங்களே ஏற்றி வைக்கப் பட்டுள்ளது. அதாவது, கல்வி கற்பதினால் உண்டாவது 'அறிவு' என்றும், அந்த அறிவை அடைந்தவனை 'அறிவாளி' என்றும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறே, இந்தக் கல்வி கற்காதவனுக்கு **‘அறிவு’** உண்டாகாது என்றும், அவனை கல்வியறிவு இல்லாத **‘முட்டாள்’** என்றும் சில முற்போக்குவாதிகளால், இந்த மொத்த மனித சமுதாயத்திற்கும் மூடத்தனம் போதிக்கப்பட்டுள்ளது.

கல்வி கற்பதினால் மட்டுமே ஒருவன் அறிவாளி ஆகிவிட முடியும் என்றால், **‘உபநிஷதங்கள்’** தோன்றிய அன்றைய காலங்களில் இதுப்போன்று ஒருவரும் பள்ளிக்குச் சென்று, பாடங்களைப் படித்தவர்கள் இல்லை.

அப்படி இருக்க, இந்த மனிதன் அறிய வேண்டிய மகத்தான பல அரிய உண்மைகளை அவர்களால் எப்படி இந்த உலகத்திற்கு எடுத்துக் கூற முடிந்தது?

அத்துடன், அவர்களால் கொடுக்கப்பட்ட உன்னதமான **'உபநிஷத உண்மைகளை'** போன்ற உயர் ஞானக் கல்வியை, இன்றைய கல்வி கற்ற மாணவ சமுதாயத்தினால் ஏன் கொடுக்க முடியவில்லை?

அதற்குக் காரணம் என்ன?

கல்வி என்பது ஏதோ மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட அறிவு என்றும், திணிக்கப்பட்ட திறமை என்றும் இவர்கள் கருதுவதினால் மட்டுமே இதுப்போன்ற உயர் ஞானங்களை கொடுக்கக்கூடிய கல்வியை இவர்களால் கொடுக்க முடியவில்லை.

மேலும், காலத்திற்குத் தகுந்தாற் போன்று கல்வி கற்க வேண்டும் என்றும், அதிலே, பல புதிய கல்வி முறை மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்றும், இவர்கள் உண்டாக்கிய இந்த கல்வித் திட்டம், இன்றைய மாணவர்களை எங்கே அழைத்துச் செல்கிறது?

எவர் கையில் பார்த்தாலும் கைப்பேசி, கம்ப்யூட்டர் என ஏராளமான எண்ணங்களுக்கு வழி வகுக்கும் வல்லமைக் கொண்ட கல்வி முறையாக மாற்றப்பட்டுள்ளதினால், மனதை விசாரித்து, அந்த அறியை அறிவதற்கு பதிலாக, அனைவரும் புற

அறிவு என்று, பல புதுமைகளை மேலும், மேலும் மனதில் புகுத்திக் கொள்கிறார்கள். இதனால், இவர்களை அறிவாளிகள் என்று கருதிக் கொள்கிறார்கள்.

காலங்கள் மாறலாம், கல்வி முறை மாறலாம், சுற்றுப்புறச் சூழ்நிலைகள் மாறலாம், சுகாதாரம் மாறலாம். ஆனால், மனிதன் மாறி இருக்கிறானா?

யோசித்துப்பாருங்கள்?!

அன்றைய மனிதர்களுக்கும், இன்றைய மனிதர் களுக்கும் என்ன வித்தியாசம் உள்ளது. அந்த வித்தியாசம் எதில் உள்ளது?

உடலிலா? அல்லது மனதிலா?

அவனது, உடல் உறுப்புகளில் மாற்றம் நிகழ்ந்துள் ளனவா? அதாவது, அன்று நான்கு கைகள், நான்கு கால்களுடனும் இருந்தவன், இன்று இரண்டு கைகள், இரண்டு கால்களுடன் மாறி விட்டானா?

இல்லையே! அன்றுமுதல் அப்படியேதான் இருக்கிறான்.

ஆனால், இவர்கள் கற்றுக் கொள்கின்ற கல்வி குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்று கூறப்படுவதாக ஏற்றி வைக்கப்படுகிறது.

எல்லாமே, தவறாகவே ஏற்றி வைக்கப்படுகின்றன.

அதாவது, மனித **அறிவின் பரிணாமம்** என்பது ஒரு அறிவு தாவரத்தில் தொடங்கி, ஆறு அறிவு படைத்த மனிதன் வரை அறிவுப் பரிணாமம் மாற்றத்தை அடைந்துள்ளது.

அந்த வகையிலே, இன்று இந்த மனித உடலில் இருக்கின்ற ஆறாம் அறிவு உயர் பரிமாண அறிவு. ஆனால், அந்த ஆறாம் அறிவுக்கு அப்பாற்பட்ட இன்னும் சில உயர் பரிமாண அறிவு வெளிப்பட்டு இருக்கிறது.

அதுதான் அன்றைய ரிஷிகள் மற்றும் சித்தர்கள் **உண்மையான அறிவு** என்று கூறினார்கள். அதை ஏன் இன்றைய கல்வியாளர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்?

காரணம், அவர்களும் இதுப்போன்ற ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களால் ஆன கல்வியைக் கற்றவர்களாதலால், இவர்களுக்கு தன்னுள் மலரவேண்டிய

அந்த உயர் பரிமாண அறிவைப் பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லை என்பதினால் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள்.

அதாவது, அன்றைய குருகுலக் கல்வியில் பயின்ற கல்வியினால் உண்டான அறிவின் வளர்ச்சிக்கும், இன்றைய நவீன கல்வியில் பயின்ற கல்வியினால் உண்டான அறிவின் வளர்ச்சிக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை எல்லோரும் அறிந்ததே.

அன்றைய மெய்ஞ்ஞானிகளின் கண்டு பிடிப்புகள்தான் இன்றைய விஞ்ஞான அறிவுக்கு விதைகள் எனலாம். அதுவும், அன்றைய அறிஞர்களின் கல்விமுறைகள் மெய்ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் ஒருங்கிணைத்து போதிக்கப்பட்டன.

ஆனால், இன்றைய கல்வி முறைகள் மெய்ஞானம் என்றால் என்ன? என்றே தெரியாத அளவிற்கு, விஞ்ஞானத்தால் அனைத்தையும் மூடி மறைத்து விட்டன.

அதனால், இன்றைய கல்வி முறையில் கற்ற மாணவர்கள் யாருக்குமே, அந்த அகண்ட அறிவு அவர்கள் உள்ளே இருந்து வெளிப்படுவதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்படவில்லை.

உண்மையில் உள்ளே இருந்து வெளிப்பட்ட உண்மை அறிவு வெளிப்படுத்திய நூல்கள்தான் நம்மிடையே அன்றுமுதல் இன்றுவரை இருக்கிறது. அந்த நூல்கலை எல்லாம் வெளி நாட்டினர்கள் இங்கிருந்து எடுத்துச் சென்று, அவர்கள் எழுதியதாக கூறிக் கொள்ளும் அனேக நூல்கள் இன்றும் நாம் காண முடிகிறது.

அன்றைய மெய்ஞ்ஞானிகள் அளித்த அனேக அறிவியல் நூல்கள், இரசவாத நூல்கள், ஆன்ம அறிவு நூல்கள் என எண்ணற்ற தமிழ், சமஸ்க்ருத நூல்கள் நம் பாரதத்தில் படைக்கப்பட்டன.

அவைகளில் இன்று நாம் படிக்கின்ற சில நூல்களின் வரிசையில் திருக்குறள், திருமந்திரம், திருப்புகழ் போன்ற எண்ணற்ற தமிழ் நூல்களும், உபநிஷதங்கள் போன்ற சமஸ்கிருத நூல்களும் நடைமுறையில் இருந்தாலும், அவைகளை இன்றைய இளைய சமுதாயத்திற்கு கொண்டு சேர்க்க யாருமே விரும்புவதில்லை. அதற்குக் காரணம், அதைப் படித்தால் பணம் வருமா? என்று கேள்வி கேட்கின்றனர்.

இதிலே, இன்றைய மனப்பாடம் செய்து ஒப்புவிக்கப்படும் கல்வியின் வாயிலாக, இன்றைய மாணவர்களுக்கு உள்ளிருந்து உண்மை அறிவு வெளிப்படுவதற்குப் பதிலாக,

வெளியே இருந்து புற அறிவு திணிக்கப்படுவதால், அவன் மனம் பணத்தை நோக்கி மட்டுமே பாய்கிறது. அதனால், பண்பு நலன்களைப் பற்றி அறியக்கூடிய ஆர்வம் அவனுக்கு இல்லாமல் போய் விட்டது.

அதுவும் சாதித்தவர்கள் என்ற பட்டியலில், சாதனை படைத்த பலரது வாழ்க்கை வரலாறுகளில், இன்றைய கல்வி முறையில் பணம் படைத்தவர்களையும், விளையாட்டு வீரர்களையும் மட்டுமே சாதித்தவர்களாகக் காட்டும் பொழுது, சாதனையின் உண்மை சாத்தியம் எதுவென்று இன்றைய இளைஞர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் தெரிவதில்லை.

ஆங்கிலேயர்களால் உண்டாக்கப்பட்ட **'மெக்காலே கல்வி'** முறை நம் இந்தியாவிற்கு வரும் முன்னர், இதைவிட மோசமான சூழலில் நம் இந்தியா இருந்தது என்று ஒரு சாரர் இன்றைய கல்வி முறையை ஆதரிக்கின்றனர்.

மற்றொரு சாரர், **'மெக்காலே கல்வி'** முறை நம் இந்தியாவிற்கு வரும் முன்னரே, நவீன கண்டு பிடிப்புகளுக்குக் காரணமான பெரும்பாலான இந்தியர்கள், நம்முடைய தாய் நாடான இதே பாரதத்தில் இருந்திருக்கின்றனர் என்று, அன்றைய கல்வி முறையில் பயின்றவர்கள் பட்டியலைக் கொடுக்கின்றனர்.

அத்துடன், அன்றைய குருகுலக் கல்வி முறையை ஆதரிக்கவும் செய்கின்றனர்.

இவர்கள் இருசாரரின் கூற்றைக் கொண்டு அலசி ஆராய்ந்துப் பார்த்ததில், ஒரு உண்மை நமக்குப் புரிகின்றது.

இன்றைய கல்வி முறைகள் வாயிலாக அன்றைய மெய்ஞானிகள் மதிக்கப்படவில்லை. அவர்களின் அரிய உண்மைகளை கல்வித் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.


சரி!, அதுப்போகட்டும். இன்றைய நவீன இந்தியாவின் நவீனக் கல்வி திட்டத்தினால், புதியதாக எந்த ஒரு விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளையும், விஞ்ஞானிகளையும் கூட நாம் ஏன் காண முடிவதில்லை?

அதுவே, அன்றைய கல்வி முறையில் நம்மவர்கள் கற்ற மெய்ஞானத்தின் வாயிலாக மட்டுமே, இன்றைய விஞ்ஞானம் வளர்ந்தது என்ற அடிப்படை உண்மையைக் கூட, இன்றைய கல்வியாளர்களால் மறைக்கப்பட்டு, அன்றைய ஆங்கிலேய ஆட்சியாளர்களின் கல்வித் திட்டத்தினை இன்று வரை மாற்றாமல் அப்படியே கொண்டு செல்வதின் நோக்கம்தான் என்ன? என்பதுவும் யாருக்கும் தெரிவதில்லை.

ஆனால், ஒன்றுமட்டும் அனைவரும் அறிந்து வைத்துக் கொண்டுள்ளார்கள். அதுதான் எதைப் படித்தால், எவ்வளவு சம்பாதிக்கலாம்? என்பதை மட்டும் எளிதாக ஏற்றுக் கொள்கிறார்கள். அந்த அளவிற்கு பணத்தின் மீதும், ஆடம்பர வாழ்க்கையின் மீதும் அவர்களுக்கு ஆர்வம் உண்டாக்கி இருப்பதுதான் இன்றைய கல்வி முறையின் சாதனையாகக் கூறலாம்.

அதுவும் அன்றைய ஆங்கிலக் கல்வி முறையை, அப்படியே இன்றுவரை நடைமுறையில் வைத்துக் கொண்டு, இன்றைய ஆட்சியாளர்கள் ஆள்கிறார்கள் என்றால், அந்த ஆட்சியினால், நாம் அடைந்த இலாபம் என்பது எல்லோருக்கும் இலவசம் ஏதாவது கிடைக்குமா? அரசாங்க உத்தியோகம் ஏதாவது கிடைக்குமா? அல்லது, ஒட்டுக்கு எவ்வளவு பணம் கிடைக்கும்? என்பதாக இருக்கிறது.

இன்று பயன்பாட்டில் மாணவர்கள் பயன்படுத்துகின்ற நவீன கம்ப்யூட்டர்கள் முதல் கைக்கணினி வரை அனைத்துமே செயல்பட வேண்டுமானால், அதற்கான பைனரி எண்ணகளான 0, 1 என்ற இரண்டு எண்களில், **'பூஜ்ஜியம்'** பற்றி எல்லோருமே தெரிந்து வைத்துள்ளார்கள்.





அந்த பூஜ்ஜியத்தைக் கண்டு பிடித்து, நம்முடைய பாரதத்திற்கு பெருமை தேடி தந்த கணிதவியலாளர் ஆர்யபட்டா அவர்களை, இன்றைய இளைஞர்களும், மாணவர்களும் அறிவார்களா? ஆம்! பூஜ்ஜியத்திற்கான ஒரு குறியீட்டை உருவாக்கிய முதல் நபர் நம் பாரத தேசத்தில் பிறந்தவர் ஆவார்.

மேலும் அவரது முயற்சிகள் மூலமாகவே கூட்டல் மற்றும் கழித்தல் போன்ற கணித செயல்பாடுகள், இந்த ஒரே இலக்கமான பூஜ்ஜியத்தைப் பயன்படுத்தி கண்டு பிடிக்கப்பட்டன.

பூஜ்ஜியத்தின் கருத்தும், இட–மதிப்பு அமைப்பில் அதன் ஒருங்கிணைப்பும், பத்து எண்களை மட்டுமே பயன்

படுத்துவதன் மூலம், மற்ற எண்கள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் எளிதாக கணக்கிட முடிந்தது.




இது நமது இந்தியாவின் அன்றைய கல்வி முறையில் வந்த மெய்ஞானத்தின் அறிவு.

**ஃபிபனாச்சி எண்கள் (Fibonacci numbers)**

ஃபிபனாச்சி எண்கள் என்பவை கணிதத்தில் ஒரு குறிப்பிட்ட முறையில் அடுக்கப்படும் ஓர் எண் தொடரில் வரும் எண்கள். இந்த எண் தொடரில், அடுத்தடுத்து வரும் இரண்டு எண்களின் கூட்டுத்தொகையாக அமைவது அதற்கு அடுத்து வரும் எண்.

உதாரணமாக, 1,1,2,3,5,8,13,21,34,55 என்று தொடரும் இவ்வரிசை.

முதல் இரண்டு எண்களாக 1, 1 என்பதை எடுத்துக் கொண்டால் அடுத்து வரும் மூன்றாவது எண் 1+1 = 2. நான்காவது எண் 1+2 = 3, ஐந்தாவது எண் 2+3 = 5, இப்படியாக இவ்வெண்கள் தொடர்ந்து விரிகின்றது.

இவ்வெண்கள் தொடரும், இதன் பண்புகளும் கணக்கில் அதிகம் தொடர்பு இல்லாதவரையும் ஈர்க்கும் ஒரு கணிதக் கருத்து எனலாம்.

இயற்கையிலும் இந்த ஃபிபனாச்சி எண் தொடரில் வரும் எண்கள் பரவலாகக் காணப்படுகின்றன.

வடமொழியில் **'சந்தஸ் சாஸ்திரம்'** (சீர் இயல்) என்று பிங்களர் (ஏறக்குறைய கி.மு.3–ஆம் நூற்றாண்டு) எழுதிய நூலில் **'மாத்ரா மேரு'** என்ற பெயரில் முதன் முதல் இக் கருத்துப் பொருள் பேசப்பட்டது.

ஆறாவது நூற்றாண்டில் விரஹங்கர் எழுதிய யாப்பிலக்கண நூல்களில் மறுபடியும் பேசப்பட்டது. 12 ஆவது நூற்றாண்டில் ஹேமசந்திரர் என்பவருடைய நூலிலும்

விரஹங்கர் நூலுக்கு கோபாலர் எழுதிய உரை நூலிலும் இது விபரமாகப் பேசப்படுகிறது.




அடுத்து, கணினி நிரல்கள் எழுதப்பட்ட அடிப்படை மொழி **‘பைனரி எண்கள்’**. இந்த பைனரி என்பது அடிப்படையில் 1 மற்றும் 0 என்ற இரண்டு எண்களின் தொகுப்பைக் குறிக்கிறது, அவற்றின் சேர்க்கைகள் **பிட்கள்** மற்றும் **பைட்டுகள்** என்று அழைக்கப்படுகின்றன.

**பைனரி எண்** முறையை முதன்முதலில் வேத அறிஞர் **பிங்கலா** தனது **சந்தஹஸ்திரா** என்ற புத்தகத்தில் விவரித்தார், இது *புரோசோடி* பற்றிய ஆரம்பகால சமஸ்கிருத நூலாகும்.

இன்றைய நவீன கண்டுபிடிப்பான கணிணிகளின் (Computers) மொழி என்பது இந்த *'பைனரி'* எண்களான 0, 1 என்பதை அடிப்படையாக கொண்டே பேஸிக், போர்ட்ரான், C++ எனத் தொடங்கி தற்போதைய போட்டோசாப் வரை, அனைத்து கணியின் பயன்பாட்டிற்குத் தேவையான மென் பொருள்களும் எழுதப்படுகின்றன.

அன்றைய நம் பாரதத்தின் கல்வி முறையில் மூலம்தான் இந்த கணிணி **'அறிவு'** பெறப்பட்டது. அடுத்து, நவீன கணிதத்தில் கையாளப்படும் *பெல்லின் சமன்பாடு* உட்பட, உறுதியற்ற இருபடி சமன்பாடுகளை தீர்க்க, அன்றைய **சக்ரவாலா முறை** அவசியமாக இருந்தது.

அதாவது, இது ஒரு சுழற்சி வழிமுறையாகும். முழு தீர்வுகளை பெறுவதற்கான இந்த முறையை 7 ஆம் நூற்றாண்டின் நன்கு அறியப்பட்ட கணிதவியலாளர்களில் ஒருவரான **பிரம்மகுப்தர்** உருவாக்கியுள்ளார்.

மற்றொரு கணிதவியலாளரான **ஜெயதேவா** பின்னர் இந்த முறையை, ஒரு பரந்த அளவிலான சமன்பாடுகளுக்கு பொதுமைப்படுத்தினார், அதன் பிறகு, **இரண்டாம் பாஸ்கரா** என்பவர் தனது **பிஜகனிதா** என்ற நூலின் வாயிலாக செம்மைப்படுத்தினார்.

இவர்கள் அனைவருமே அன்றைய இந்தியாவில் கல்வி பயின்று **‘அறிவு’** பெற்ற அன்றைய அறிவியலாளர்கள் ஆவார்கள்.

மேலும், பண்டைய இந்தியாவின் குறிப்பிடத்தக்க விஞ்ஞானிகளில் ஒருவரான **ஆச்சார்யா கனாட்**, இன்றைய விஞ்ஞானிகளுக்கு அணுவைப்பற்றிய ஆராய்ச்சிகளுக்குத் தேவையான, அணுக் கோட்பாட்டை உருவாக்கிய இந்திய முனிவர் ஆவார். அதாவது, 2,600 ஆண்டுகள் முன்பு நம்முடைய பாரத தேசத்தில் அன்றைய கல்வி முறையில் **‘அறிவு’** பெற்றவர்.

இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் உள்ள உஜ்ஜைனியைச் சேர்ந்த வானியலாளர், கணிதவியாளர் **வராகமிஹிரர்**. **’பிரஹத் சம்ஹிதை’** என்ற கலைகளஞ்சியம் போன்ற விரிவான நூலை எழுதியதற்காகப் புகழ்பெற்றவர்.


சம இரவு–பகல் நாளில் இரண்டுக்கும் இடையே உள்ள இடைவெளி 50.32 விநாடிகள் என்பதை முதலில் கணித்துக் கூறிய அன்றைய இந்தியர்.

மால்வா பகுதியின் மன்னர் **யசோதர்மனின்** அமைச்சரவையில் நவரத்தினங்களில் ஒருவராகத்

திகழ்ந்தவர். அதாவது, ஒன்பது பிரதான மந்திரிகளில் **வராகமிஹிரர்** என்ற இவரும் ஒருவர். இவருடைய தந்தை **ஆதித்யதாசரும்** ஒரு வானியலாளரே.

அடுத்து, உலகில் முதன் முதலில் அறுவை சிகிச்சையை மேற்கொண்ட இந்திய மருத்துவர் **'சுஸ்ருதர்'** அன்றைய கல்வி முறையில் பயின்றவர்.

கண்புரை நீக்க அறுவை சிகிச்சை, ஒட்டுறுப்பு (பிளாஸ்டிக்) அறுவை சிகிச்சை உட்படப் பல்வேறு அறுவை சிகிச்சை முறைகளைப் பற்றி அவர் விவரித்த **'சுஸ்ருத சம்ஹிதை'** நூலின் மூல வடிவம் தற்போது கிடைக்கவில்லை.



இந்த நூல் ஆயுர்வேத மருத்துவத்தின் அடிப்படை நூலாகக் கருதப்படுகிறது. எட்டாம் நூற்றாண்டில் இந்த நூல் அரபியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, ஆயுர்வேத மருத்துவத்தின் இரண்டு அடிப்படை நூல்களுள் ஒன்றான **'சரஹ சம்ஹிதை'** யை எழுதியவர் **'சரகர்'** என்ற பேரறிஞர் ஆவார்.

2000–க்கும் மேற்பட்ட மருந்து செய்முறை களைக் கொண்டது இந்நூல். ஆயுர்வேத மருத்துவ த்தின் தந்தையாகக் கருதப்படும் இவர், காஷ்மீர் பகுதியைச் சேர்ந்தவர்.

சரகர் என்ற பெயருக்கு நாடோடி அறிஞர், நாடோடி மருத்துவர் என்று அர்த்தம். வாழ்க்கை முறை, மனித முயற்சிகள் மூலம் நோய்களுக்குச் சிகிச்சை அளித்து உடல் நலனைப் பாதுகாக்கலாம் என்ற கோட்பாட்டை முன்வைத்துச் செயல்பட்டவர்.

அத்துடன் நோய்க்குச் சிகிச்சை அளிப்பதைவிட முன்கூட்டியே தடுப்பதுதான் மிகச் சிறந்தது என்பதையும் வலியுறுத்தியவர். இவரும் அன்றைய கல்வி முறையில் **'அறிவு'** பெற்ற இந்திய மருத்துவர் ஆவார்.

ஜகதீஸ் சந்திர போஸ் (1858–1937),
பிரபுல்லா சந்திர ரே (1861–1944),
ராமானுஜம் (1887–1920),
சத்யேந்திர நாத் போஸ் (1894–1974),
மேகநாத் சஹா (1893–1956),
ஹோமி பாபா (1909–1966),
விக்ரம் சரபாய் (1919–1971),
பி.சி. மஹாலனோபிஸ் (1893–1972),
சி.வி.ராமன் (1888–1970),
ஹர் கோபிந்த் கொரானா (1922–2011),
ஹரிஸ் சந்திர (1923–1983),

இதுப்போன்ற மிக உயர்ந்த அறிவியளார்களை உண்டாக்கிய அன்றைய இந்தியாவில், அன்றைய கல்வித் திட்டத்தில் படித்த **அப்துல்கலாம்** (1926–1996) போன்றவர்கள் நம் இந்தியாவிற்கு பெருமை சேர்த்தவர்கள் எனலாம்.

# 3. இன்றைய கல்வியும், இளைஞர்களும்

நவீன கல்வித் திட்டம் முற்றிலும் பணத்தை அடிப்படையாக கொண்டு, பெரிய பெரிய தொழிற்சாலைகளில் ஒரே மாதிரியான பொருள்களைத் தயார் செய்து அனுப்புவது போன்று, மாணவர்களை சுயமாக சிந்திக்க அனுமதிக்காமல் ஒரே மாதிரி தயார் செய்து அனுப்ப முயற்சிக்கிறது.

அதனால்தான், நன்றாகப் படிக்கின்ற குழந்தைகளை மட்டும், இன்றைய பணக்கார தனியார் கல்வி நிறுவனங்களில் பணம் அதிகம் கொடுத்து சேர்க்கப்படுகின்றது.

சரியாகப் படிக்காத குழந்தைகளை வசதி குறைவான சாதாரணமான கல்வி நிறுவனங்களில் பணம் குறைவாகக் கொடுத்து சேர்க்கப்படுகின்றது. பின் தங்கிய குழந்தைகளை அரசு பள்ளிகளில் இலவசமாகச் சேர்க்கப்படுகின்றது.

இவ்வாறு, இன்றைய கல்வி நிறுவனங்களின் கற்பிக்கும் போக்கு, மாணவர்களின் தரத்தை எந்த அளவிற்கு உயர்த்தும் என்பதை நாம் இன்றைய மாணவர்களை நேரடியாகப் பார்த்து அறிந்துக் கொள்ளலாம்.

இதுப்போன்ற சமூக அவலங்களுக்கு முழுக்க முழுக்க அரசு மட்டுமே பொறுப்பேற்க வேண்டும். மற்றவர்களை இதில் குறை கூற முடியாது. ஏனெனில், இதுப்போன்ற கல்வி நிறுவனங்களையும், கல்வி கற்பிக்கும் முறைகளையும் அரசு அனுமதிக்காமல் நடைமுறையில் சாத்தியம் இல்லை.

நவீனக் கல்விமுறை இன்றைய மாணவர்களை அறிவால் உயர்த்தி இருக்கின்றதா என்றால், இல்லை என்றே கூறலாம். காரணம், மாணவர்கள் யாரும் புரிந்துக் கொண்டு படிப்பதில்லை.

ஆசிரியரின் கட்டாயப் பாடத் திட்டத்தினாலும், கல்வி நிறுவனங்கள் கடைப்பிடிக்கின்ற கால அட்டவணைப்படி, பாடங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாட்டினாலும், மாணவர்களுக்கு பாடங்கள் பலவந்தமாக திணிக்கப்படுகின்றன.

மாணவர்கள் பாடங்களைப் படித்துப் புரிந்துக் கொண்டுள்ளனரா என்று ஆசிரியரும் கவலைப் படுவதில்லை, கல்வி நிறுவனங்களும், பெற்றோர்களும் கூட அறிந்துக் கொள்வதில்லை. ஆனால், சில ஆசிரியர்கள் மட்டும் அவர்களைப் பற்றி ஒரு வகையில் வருத்தப்படுகின்றனர்.

அதன் விளைவாக, மாணவர்களுக்கு புரியாத வைகளை புரியவைக்கும் புதிய முயற்சியாக, இவர்கள் மட்டும் மாலை நேர டியூசன் வகுப்புகளில், மேலும் படித்து, புரிந்துக் கொண்டு பயன் பெறலாம் என்ற புதிய கோட்பாடுகளை, இவர்களாகவே உண்டாக்கிக் கொள்கின்றனர். இதற்குப் பெற்றோர்களும் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

அவர்களுக்கு மகன் / மகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம். மற்றும் பெற்றோர்கள் இருவருமே பணம் சம்பாதிக்க பணிக்குச் செல்வதால், பணத்தினால் படிக்க வைத்து விடலாம் என்ற மற்றொரு எண்ணத்தில், இவர்களது குழந்தைகளை கவனித்துக் கொள்வது என்பது சிரமமான காரியம் என்பதினால், இதுப்போன்ற டியூசன் சென்டர்களை அதிகம் வரவேற்கின்றனர்.

குதிரை வண்டிக்காரன், அந்த குதிரையை தான் ஓடும் பாதைகளில், அதன் இருபுறங்களிலும் வேடிக்கைப்பார்க்காமல் செல்வதற்காகவும், பாதையை மட்டும் நேராக கவனித்துப் போக வேண்டும் என்பதற்காகவும், அதன் இரண்டு கண்களுக்கு இருபுறங்களிலும், தடைகளை உண்டாக்கும் தடுப்பினைக் கட்டி வைத்திருப்பான்.



அதுப்போன்று, இன்றைய நவீன கல்வித்திட்டமும், தங்களுடைய மாணவர்களை, தாங்கள் செலுத்தும் பாதைகளில் இருந்து விலகாமல் இருக்க வேண்டும் என்பதில் மிகவும் விழிப்பாக இருக்கின்றது.

திணிக்கப்பட்ட கல்வி அறிவினால், திறமைகள் ஒன்றும் வெளிப்படாது. இன்றைய கல்வி முறையில் இதற்கான கால அவகாசம் கொடுக்கப்படுவதில்லை.

ஒவ்வொரு மாணவனும், காலை எழுந்து பள்ளிக்குச் செல்வதற்குத் தயாராகின்ற நேரம் முதற்கொண்டு, இரவு அவன் பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்து உறங்கும் நேரம் வரை,

டியூசன், வீட்டுப்பாடங்கள் என்ற பெயரில், ஏகப்பட்ட சுமைகளை அவன் மனதிற்குள் சுமத்தி விடுகின்றார்கள்.

அந்த படிக்கும் பாடங்களின் வாயிலாக உண்டாகின்ற புதிய விசயங்களினால் அவனது மனம் எப்பொழுதும் எதையாவது சிந்தித்தவாறு, பல்வேறு எண்ணங்களினால் மிகப்பெரிய மனப் போராட்டத்தை அவன் மனதில் சந்தித்து வருவதைக் கண்ட பெற்றோர்களும், தனது மகன்/மகள் மிகப்பெரிய சிந்தனையாளராக மாறப்போகின்றான் என்று பகற் கனவு கண்டு, கடைசியில் அவனை/அவளை மனநல மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிர்பந்தம் உண்டாகின்றது.

இதனால், அந்த மாணவர்களின் சுயத்தன்மை பறி போவதுடன், அவர்கள் சுயமாக சிந்திக்கும் ஆற்றல்களை சுத்தமாக இழந்து விடுகின்றார்கள்.

இதனால், மாணவர்களின் தனிப்பட்ட திறமை ஆசிரியர் களுக்கும், பெற்றோர்களுக்கும் தெரியாமல் போய் விடுகின்றது. அந்த மாணவர்களை அவர்களுடைய திறமையைக் கண்டு ஊக்குவிக்க வேண்டிய பெற்றோர்களும், ஆசிரியர்களும், அவனைக் கண்டு கொள்ளாத காரணத்தினால், அவன் தன்

திறமையை வெளிப்படுத்த முடியாமல், வீணாக திணிக்கப்பட்ட கல்வியில் சிக்கி சீரழிகின்றான்.

இதில் சரியாக படிக்காத மாணவர்கள் மட்டுமே, இந்தக் கல்வித்திட்டத்தில் சிக்காமல் தப்பிப் பிழைத்து, இன்றைய சமுதாயத்தற்குப் பயனுள்ள பல பணிகளை செய்து வருகின்றனர். இதுவே இன்றைய கல்வி முறையின் மிகப் பெரிய பலவீனம் ஆகும்.

கொடுக்கப்பட்ட புத்தகச் சுமையினாலும், வருடத்தின் 365 நாட்களும் படித்துக் கொண்டே இருப்பதினாலும், உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் இன்றைய மாணவர்கள் பாதிக்கப்படுவதை இன்றைய சமூகம் கண்டு கொள்வதில்லை.

மாணவர்களின் மனதில் இருக்கின்ற தனிப்பட்ட ஆசைகளை விசாரித்து அறிந்து, அதற்கேற்ப அவர்களை ஊக்குவிக்கத் தயாராக யாருமே இல்லை.

உண்மையில், ஒருவனிடம் இருக்கின்ற தனிப்பட்ட திறமை என்பது, அவனுக்கே உரித்தானது. இயற்கையின் நியதிப்படி, படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிரினமும், அவைகளுக்கான தனிப்பட்ட ஆசைகளை அனுபவிப்பதற்காக

இந்த பூமிக்கு வருகின்றது. அதில் மனிதன் மட்டும் விதி விலக்கல்ல.

இதில் மனிதனைத் தவிர, மனிதனிடம் மாட்டாத மற்ற அனைத்துமே அவைகளின் சொந்த ஆசைகளுக்கு ஏற்ப சுதந்திரமாகவும், சுகமாகவும் இருக்கின்றன.

ஆனால், மனிதன் மட்டுமே மமதையின் காரணமாக, தன்னுடைய குழந்தை, தன்னுடைய குடும்பம், என்ற சுயநலத்தினால், இவனது சுதந்திரம் பறிபோனதை அறியாமல், இவனை நம்பி வந்த, இவனது மகன்/மகள் போன்றவர்களுக்கு, இவனது ஆசைகளை கட்டாயமாகத் திணிக்கின்றான்.

இவன் ஒரு வழக்கறிஞரோ, மருத்துவரோ ஆவதற்கு ஆசைப்பட்டு, அது நடக்காமல் போனதினால், இவனது மகன்/மகள் அவ்வாறு ஆவதற்கு, இவனது ஆசைகளை வலுக்கட்டாயமாக அவர்களிடம் திணிக்கின்றான்.

பெரும்பாலானவர்களுக்கு பெரிய மருத்துவராகவோ, வழக்கறிஞராகவோ, தன்னுடைய மகன்/மகள் படித்து வந்து விட்டால், நாமும் மற்றவர்களைப் போன்று, பெரும் பணக்காரர் ஆகிவிடலாம் என்ற ஆசை இருக்கின்றது.

*உண்மையில், பணம் சம்பாதிப்பது என்பது செய்யும் தொழிலில் இல்லை. செயல்படுபவனின் திறமையில் உள்ளது.*

அது எவ்வாறு எனில், ஒரு பாடகனுக்கு அவனது முழு திறமை பாட்டு பாடுவது மட்டுமே. ஒரு விளையாட்டு வீரனுக்கு அவனது முழு திறமை விளையாடுவது மட்டுமே. இந்த இருவரின் உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுத்து, அவர்களின் விருப்பத்தை ஆதரித்தால் போதும்.

இந்த இருவரில், அவர்களது தனிப்பட்ட திறமையை அங்கீகரித்து, நன்றாகப் பாடுபவனை பாடுவதற்கும், நன்றாக விளையாடுபவனை விளையாட்டிலும் அனுமதித்தால் மட்டும் போதும்.

அவர்கள் இருவரும் அவர்களிடமுள்ள திறமையை வெளிக்கொணர்ந்து வெற்றி பெற்று விடுவார்கள். அந்த வெற்றியின் அடையாளமாக அவர்களுக்குப் பணம் தானாகவே அவர்களிடம் வந்து சேரும்.

அதாவது, *“கஷ்டப்பட்டு உழைப்பதினால் மட்டும் பணம் வராது. இஷ்டப்பட்டு உழைப்பதினால் மட்டுமே பணம் வரும்.”*

இதை விடுத்து, பாடுபவனை விளையாடவும், நன்றாக விளையாடுபவனை, பாடவும் கட்டாயப் படுத்துவது, இவர்கள் இருவரின் வாழ்க்கையை வீணடிப்பதாகும். இதுப்புரியாமல், இன்றைய கல்வித்திட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரியான கல்வியைக் கற்பிக்க முயற்சிக்கின்றது.

அத்துடன், கல்விக் கூடங்களின் மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறவேண்டும். அதனால், மற்ற கல்வி நிறுவனங்களை விட தரம் உயர்ந்த கல்வி நிறுவனம் தனது மட்டுமே எனப் பெயர் பெற வேண்டும். அந்த பெயரை ஒவ்வொரு வருடமும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அதன் வாயிலாக அதிக கட்டணம் வசூலிக்க வேண்டும். இதுப் போன்ற சுய நல நோக்கம் ஒன்று மட்டுமே, கல்வி கற்றுக் கொடுக்கின்ற கல்வி நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.

இதைத்தவிர, மாணவர்களின் தனிப்பட்ட அறிவை ஆராய்ந்து, அவனுக்கு எதில் ஆர்வம் உள்ளது என்பதை அவனிடம் கேட்டு, அதற்கான சந்தர்பங்களை அவனுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற அக்கரையின்றி, மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணத்தை கட்டாயமாக வசூலிப்பதிலேயே குறியாகவும் இருக்கின்றது.

இதனால், இன்றைய மாணவர்கள் படித்து பட்டம் பெற்று முடிக்கும் பொழுதே, பணம் பறிக்கும் இயந்திரமாக மாறி விடுகின்றனர்கள். அதன் காரணமாக, மக்கள் சேவை என்பதெல்லாம் மறந்து, மக்களிடம் பணம் பறிக்க மட்டுமே தொழில் செய்யும் சூழலுக்கு தள்ளப்படுகின்றனர்.

அதனால்தான், இன்றைய மருத்துவம், நீதிமன்றம், வியாபாரம், விவசாயம் என எதை எடுத்துக்கொண்டாலும், பணம் மட்டுமே பிரதானமாக இருக்கின்றது. அன்பு, கருணை, பணிவு, பரோபகாரம் போன்ற அனைத்தும் அவர்களிடத்தில் இல்லாமல் போய்விட்டது. காரணம், கற்ற கல்வியில் செலவு செய்த பணத்தை, பெற்ற வேலையின் வாயிலாக திரும்பப் பெற்று, வங்கியில் வரவு வைக்க வேண்டிய கட்டாயம் இன்றைய அனைத்து தரப்பிலும் பார்க்க முடிகின்றது.

மாணவர்கள் கல்லூரியில் படிக்கும் காலத்தி லேயே கட்டாயக் கடன்காரர்களாக மாற்றுகின்ற கல்வி நிறுவனங்களின் நவீன கல்வி முறையினால், அவன் கற்று முடித்து வேலைக்கு வந்ததும், அந்தக் கடனைக் கட்ட வேண்டிய கட்டாயத்தின் காரணமாக, பணம் மட்டுமே நோக்கமாக மாறிய மாணவர்கள், அதற்காக, மனித நேயத்தைக் கூட இழக்கின்றார்கள். இதுவே, இன்றைய நவீன கல்வித் திட்டத்தின் நடைமுறை ஆகும்.

அத்தகைய இந்த கல்வியின் வாயிலாக இன்றைய வரலாற்றில் இடம் பிடிக்கின்ற அளவிற்கு, அறிவியல் அறிஞர்களோ, கணித மேதைகளோ, நீதி அரசர்களோ, காக்கும் காவலர்களோ, தொழில் நுட்ப வல்லுனர்களோ, வானியல் விஞ்ஞானிகளோ என யாரையுமே புதியதாகக் காண முடிவதில்லை.

அதற்குப்பதிலாக, அரசியல், பத்திரிக்கை, ஜோதிடம், மதுவிற்பனை, விமான நிறுவனம், தொலைக்காட்சி நிறுவனம், தொலைத்தொடர்பு, திரைப்படத்துறை, போன்ற மக்களை மகிழ்விக்கும் விசயங்களில் இன்று அனேக பிரமுகர்கள் மக்களிடையே காணப்படுகின்றார்கள்.

இதிலிருந்தே, இன்றைய கல்வி எதை நோக்கிச் செல்கின்றது என்பதைக் கூட அறிய முடியவில்லை என்றால், அவர்ளை படித்த அறிவாளி என்பதா? அல்லது படித்த முட்டாள் என்பதா என்பதை அவரவர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

**‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’** என்பது முன்னோர் மொழி. அதன் அடிப்படையில், இன்றைய கல்வி முறையின் அதீத வளர்ச்சியினை ஆரம்பத்திலேயே அறிந்துக் கொள்ள முடிகின்றது. இதற்காக இன்னும் நூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

எனவே, உடனடியாக அரசு இந்தக் கல்வி திட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவந்து விடுவது எதிர்கால சந்ததியருக்கு நன்மையை பயக்கும். இன்றைய கல்வியைப் பொருத்தவரை அனைவருக்கும் இலவசமாக அளிக்கப்பட வேண்டும். அதில் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தக் கூடிய அனேக சிறப்பம்சங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

மேலும், மனதை செம்மைப் படுத்தக்கூடிய, மகத்தான பல உண்மைகளை அவர்கள் பாடத் திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும். அத்துடன், அவைகளை ஆய்வு செய்துப் பார்க்கின்ற பயிற்சிகளை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். விஞ்ஞான அறிவியல் ஆய்வுகளைப் போன்று, காலத்திற்கு காலம் மாறுதலுக்கு உட்படாத, அன்றும், இன்றும், என்றும் ஒரே முடிவினைக் கொண்ட மெய்ஞான கோட்பாட்டை, நவீனக் கல்வியில் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு, கல்வித் திட்டம் அமையுமானால், எதிர்கால மாணவர்களே புதிய இந்தியாவைப் புத்துணர்ச்சியுடன் படைத்து, அனைவருக்கும் வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடிய தீபங்களாக பிரகாசிப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# 4. அறிய வேண்டிய அறிவு

மனதை விசாரிப்பது என்பது, எழுகின்ற எண்ணங்களை, அந்த விநாடியிலே அதை கவனித்து, மனம் எதிர்காலம், கடந்தகாலம் என வேறு எண்ணங்களுக்குச் செல்லாமல், விழிப்புணர்வுடன் கவனத்தை, அந்த எழுந்த அப்போதைய எண்ணத்தில் மட்டும் நிகழ்காலத்தில் நிறுத்திப் பார்க்கும் பழக்கத்தைப் பழகும் பொழுது, அந்த எழுந்த எண்ணம் அப்பொழுதே கரைந்து இல்லாமல் மறையும்.

அதாவது, அவனது மனம் எப்பொழுதும், தன் இருப்பில், கடந்தகாலம், எதிர்காலம் என எதுவுமின்றி, *காண்பான், காட்சி, காணப்படும் பொருள்* என்று, நிகழ் காலத்தில் இருந்து கவனிக்கும் பொழுது, மூன்றும் ஒன்றாகி, அந்த விநாடியில், அப்பொழுதே, எழுந்த அந்த எண்ணம் ஒன்றுமில்லாமல் ஆகின்றது.

இந்த கணப்பொழுது நிகழ்கின்ற இன்ப அனுபவத்தில் அவன் அந்த அறிவுடன் ஒன்றாக இணைகின்றான். அதுவும் விழிப்பு நிலையில் இந்த நிகழ்வை அவன் அனுபவிக்கின்றான்.

ஆழ்ந்த உறக்க நிலையிலோ, கனவு நிலையிலோ, அடைந்த ஆனந்த அனுபவம் போன்று இல்லாமல், விழிப்புணர்வோடு கூடிய ஆனந்த அனுபவமாக இது இருப்பதினால், இதன் நம்பகத் தன்மையை இவன் நன்கு அறிகின்றான்.

இந்த இன்பத்திற்காகத் தானே இத்தனை நாள் எதை எதையோ செய்துக் கொண்டிருந்தேன். எத்தனையோ வெளிப் பொருட்களில் இருப்பதாகக் கருதிக் கொண்டு, ஓயாமல் ஓடிக் கொண்டிருந்தேன் என்று அறிகின்றான்.

அந்த ஆனந்தம் எப்பொழுதும் நிலைத்திருக்கும் சூக்குமத்தை, சுயமாக அறிந்துக் கொண்டதினால், எப்பொழுதும் நிகழ்காலத்தில் தன் இருப்பில் இருக்கின்றான்.

இதற்காக இவன் செய்ய வேண்டியது எல்லாம், எப்பொழுது இவனுக்கு எண்ணம் எழுந்தாலும், அதை நிகழ் காலத்தில் சந்தித்து, அப்பொழுதே அந்த எண்ணத்திற்கான முடிவை நடைமுறைப் படுத்தியாக வேண்டிய கட்டாயத்திற்கு வருகின்றான்.

எப்படி?

உதாரணமாக, ஒரு ரோஜா மலர் செடியில் மலர்ந்து இருப்பதைக் காண்கின்றான். இவன் மனம் நிகழ்காலத்தில் அந்த மலரைக் கண்கள் (புலன்) வழியாகக் காணுகின்றது. இவனது கடந்த காலத்தில் அந்த மலர் அங்கு இல்லை. எதிர் காலத்தில் அந்த மலர் அங்கு இருக்கப் போவதில்லை. இப்பொழுது, இந்த விநாடியில் இவன் கண் முன்னால், அந்த மலர் இருக்கின்றது.

இதில் இவன் மனம் உடனடியாக ஒரு முடிவை எடுத்தாக வேண்டும்.

அந்த முடிவு, மலரைப் பறிப்பதா? வேண்டாமா?

இதில், நிகழ்காலத்தில் இவன் எடுக்கின்ற முடிவு, அந்த மலரை பறிப்பது என்றவுடன், அந்த மலரைப் பறிக்கின்ற செயலை நடைமுறைப் படுத்துவான். மலர் பறிக்கப்பட்டதும், அதன் ஸ்பரிசம் இவனுக்கு இன்பத்தைக் கொடுக்கின்றது.

அடுத்த சில விநாடிகளில், அடுத்த எண்ணமாக, அவனது மனம் அந்த மலரை அவன் காதலிக்குக் கொடுப்பதற்காக தாவுகின்றது. இந்த அடுத்த எண்ணம் நிறை வேறும் வரை, இனி இவனுக்கு மனதில் இன்பம் அந்த

மலரினால் உண்டாகப் போவது இல்லை. காரணம், இவன் மனம் எதிர்காலத்தில் காதலியை சந்திக்கக் காத்திருக்கின்றது.

இவ்வாறு, மனம் ஒரு இன்பத்தை அடைந்தாலும், அதை அனுபவிக்காமல், புதிய எண்ணம் பிறப்பதினாலும், அல்லது அனுபவித்தது போதும் என்று முடித்துக் கொண்டதினாலும் அந்த இன்பம் நிலைக்காமல் போகின்றது.

மனம் ஒரு எண்ணத்திலிருந்து, மற்றொரு எண்ணத்திற்கு அடிக்கடி தாவிக்கொண்டே இருப்பதினாலும், நிகழ்காலத்தில், பறித்த மலரை எதிர்காலத்தில் தன் காதலிக்குக் கொடுக்க நினைத்ததினாலும், அடைந்த இன்பத்தை அனுபவிக்க முடியாமல், இவனுக்கு இன்பம் நிலைக்காமல் போனது.

இதுப்போன்றே, இந்த மனம் நிகழ்காலத்தில் இருந்து, கடந்த காலத்திற்கும். அல்லது எதிர் காலத்திற்கும் என மாறி, மாறி தாவிக் கொண்டே இருப்பதை அறிந்து, நிகழ் காலத்தில் அந்த எண்ணத்திற்கு ஒரு முடிவு கொண்டுவந்து விட்டால் மட்டுமே, மனம் அமைதியில் ஆனந்தத்தை அடையும்.

இதையே மற்றொரு விதமாகக் காணலாம்.

மீண்டும், பழைய உதாரணத்தின் ஆரம்பத்திற்கே போகலாம்.

உதாரணமாக, ஒரு ரோஜா மலர் செடியில் மலர்ந்து இருப்பதைக் காண்கின்றான். இவன் மனம் நிகழ்காலத்தில் அந்த மலரைக் கண்கள் (புலன்) வழியாகக் காணுகின்றது.

இவனது கடந்த காலத்தில் அந்த மலர் அங்கு இல்லை. எதிர் காலத்தில் அந்த மலர் அங்கு இருக்கப் போவதில்லை. இப்பொழுது, இந்த விநாடியில் இவன் கண் முன்னால், அந்த மலர் இருக்கின்றது.

இதில் இவன் மனம் உடனடியாக ஒரு முடிவை எடுத்தாக வேண்டும்.

அந்த முடிவு, மலரைப் பறிப்பதா? வேண்டாமா?

இப்பொழுது, வேண்டாம் என்று ஒரு முடிவை எடுத்து விட்டான் என்றால், அந்த எண்ணம் அப்பொழுதே முடிவுக்கு வந்து விடுகின்றது. அதனால், அவனுக்கு செயல் ஒன்றும் நடக்கப்போவதில்லை. செயல் விளைவு இல்லாத காரணத்தினால். மனம் சற்று அமைதியுடன் அந்த ரோஜா

மலரை இரசித்துவிட்டு, அடுத்த எண்ணத்திற்கு மீண்டும் தயாராகின்றது.

இதுவே மனதின் இயல்பு.

பொதுவாக, நாம் மனதைக் கையாளும் வழி முறைகளில் இருந்து, முற்றிலும் மாறுபட்டு, இதுப்போன்ற **'இருப்பை'** அறிய ஆவல் கொள்ளும் பொழுது, எழும் எண்ணங்களை இல்லாமல் செய்வது எளிதாகின்றது.

அதாவது ரோஜா மலர் இருக்கிறது என்று தெரிய, மலரின் **'இருப்பு'** அறியப்பட வேண்டும் இந்த **'இருப்பு'** எதுவோ அதில்தான் நம்முடைய கவனம் ஒவ்வொரு கணமும் இருக்க வேண்டும்.

மற்றதெல்லாம், அந்த **'இருப்பு'** விளையாட்டாக வெளிப் படுத்துகின்ற தோற்ற **மாயை** என்பதை அறிய வேண்டும்.

இந்த அணுகுமுறையை நடைமுறையில் எடுத்துக் கொண்டதால், எல்லாவற்றையும் பார்ப்பவனாக அவன் ஆகிவிடுகின்றான்.

"மனம் என்பது, கடந்த காலத்து நினைவிலோ, அல்லது எதிர்காலத்துக் கனவிலோதான் எண்ணங்களாக நின்று கொண்டிருக்கும் இயல்பு உடையது. ஆனால், அதே மனதிற்கு நிகழ்காலத்தில், **‘இருப்பில்’** இடம் கிடையாது."

பொதுவாக, நிகழ்காலம் மட்டுமே நம் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், நாம் அதை அறியாமல், கடந்தகால சிந்தனைகளும், எதிர்காலத்திற்கு திட்டமிடுதல் போன்ற சிந்தனைகளும் மனதில் அடிக்கடி ஏற்படுவதை அங்கீகரிக் கின்றோம். அதனால், **மனம் போன போக்கில்** போகின்றோம்.

பொதுவாக, மனம் கடந்த காலத்தில் நடந்த அனேக நன்மைகளை அவ்வப்பொழுது அசைப்போட்டு, அதன் வாயிலாக தற்காலிகமான சந்தோசத்தை நமக்கு உண்டாக்கிவிடும்.

மற்றொரு வகையில், எதிர்காலத்திற்கு என்ன செய்ய வேண்டும் என்ற திட்டத்திற்கு நம்மை தயார் செய்து, அதற்கான ஆயத்தங்களாக பல செயல்களை நம்மைச் செய்யத் தூண்டும். ஆனால், நிகழ்காலத்தில் மட்டும் நம்மை இருக்கவே விடாது.

எவன் ஒருவன் விழிப்புணர்வோடு, ஒவ்வொரு எண்ணத்தையும் நிகழ் காலத்தில் நின்று கவனிக் கின்றானோ, அவன் மட்டுமே மனம் அற்ற நிலைக்குச் செல்கின்றான்.

மனமற்ற நிலை என்பது எண்ணங்கள் ஏதுமற்ற நிலை என்பதினால், நிர்மலமான மனதில், அந்த *மெய் அறிவு* பிரகாசிப்பதையும், அந்த பிரகாசத்தின் வெளிப்பாடாக, பல்வேறு கண்டுபிடிப்புகளுக்கு காரணமான *விஞ்ஞான அறிவு* வெளிப்பட்டிருப்பதையும் காணலாம்.

அதனுடன் ஆனந்தத்தில் திளைக்கலாம். அந்த ஆனந்தமும் நிலையாக நிலைத்திருக்கும்.

ஆனால், ஒவ்வொரு மனிதனும் தனக்கு வலுக் கட்டாயமாக திணிக்கப்பட்ட பல்வேறு எண்ணங்களால் ஆட்கொள்ளப்பட்டு, திருப்தியற்ற மன நிலையில், பணம், பங்களா, கார், தோட்டம் என எதிலுமே ஆனந்தம் உண்டாகாமல், அதைத்தேடி பல ஆன்மீக ஆலயங்களையும், சாமியார்களையும், ஆன்மீக புத்தகங்களையும், ஆன்மீக குருமார்களையும் சந்தித்து, தற்காலிகமாகச் சமாதானம் அடைகின்றான்.

ஆன்மீகத்தின் மூலம் ஆனந்தத்தை தேடி, அங்கும், இங்கும் அலைந்து திரிந்துக் கொண்டிருக்கும் பொழுது, அது உன்னுள்ளேயே இருக்கின்ற **‘மெய்ப்பொருள்’** என்பதை, உறுதியுடன் எடுத்துக் கூறும் ஒரு உண்மையானவர் கிடைக்கும் பொழுது, அவரை அவன் தெய்வமாக மதிக்கின்றான். அவரது வார்த்தைகளில் முழுமையாக நம்பிக்கை கொள்கின்றான்.

அவனது அந்த ஆழமான நம்பிக்கையின் காரணமாக சரியான ஞானத்தை அடைகின்றான்.

அந்த சரியான ஞானம் என்பது, விழிப்படைந்த விவேக சக்தியைக் கொண்டு எண்ணங்களை மனதினால் விசாரித்து, விழிப்புணர்வுடன் ஒவ்வொரு எண்ணத்தையும் நிகழ்காலத்தின் நித்தம் நின்று கவனித்து, அதன் இருப்பை இவன் அறிந்தான் எனில், எழுந்த அந்த எண்ணம் அப்பொழுதே இருப்புடன் இரண்டறக் கலந்து, இல்லாமல் ஆகி, எண்ணங்கள் அற்ற நிலையில் வெளிப்படும் உயர் அறிவு எதுவோ, அதுவே **‘மெய்யறிவு’** என்று அறிய வேண்டும்.

# 5. மன நிறைவும், குறைவும்

நண்பர்கள் இருவர் மற்றொரு புதிய நண்பனின் வீட்டிற்குச் செல்கின்றார்கள். அவன் அவர்களை வரவேற்று, அவன் மனைவியிடம் அவர்களுக்கு குடிக்க தேனீர் (டீ) கொடுக்கும் படி கேட்கின்றான். அவன் மனைவியோ வீட்டில் பால் மிகவும் குறைவாக இருப்பதைக் கண்டு, இருக்கின்ற பாலிற்கு ஏற்றாற்போல, தேனீர் வைத்து, மூவருக்கும் சரிசமமாக ஒவ்வொரு டம்பளரிலும் பாதி அளவே ஊற்றி, அதை எடுத்துக் கொண்டு வந்து மூவருக்கும் கொடுக்கின்றாள்.

அந்த டம்பளர்களில் பாதி அளவு மட்டுமே தேனீர் இருப்பதைக் கவனித்த ஒரு நண்பன், இவனது மனைவி சரியான கஞ்சத்தனம் உள்ளவள் போலும், அதனால்தான் டம்பளரில் பாதி அளவு தேனீர் மட்டுமே கொடுத்துள்ளாள் எனக் கருதுகின்றான்.

மற்றொரு நண்பனோ, இவர்களுக்கு இந்த வறுமையான சூழலிலும் வந்தவர்களை வரவேற்று, உபசரித்து, டம்பளரில் பாதி அளவாவது குடிக்க தேனீரைக் கொடுத்துள்ளார்களே, என்னே இவர்களது பண்பு என்று சந்தோசமடைகின்றான்.

இங்கு அறிய வேண்டிய உண்மை என்னவெனில், ஒரு டம்பளரில் பாதி அளவே கொடுக்கப்பட்ட தேனீரில், ஒருவன் குறையைக் கண்டான், மற்றொருவனோ அதில் நிறைவைக் கண்டான். இந்த இரு வேறு மாறுபாடுகளுக்குக் காரணம், அவரவர்களின் மனம் எப்படி இருக்கின்றதோ, அதற்கேற்றாற்ப் போலத்தான் அவர்கள் இருப்பார்கள்.

அதுப்போல, இந்த உலகம் மக்களின் மன நிலைக்கு ஏற்றாற்போல, பலருக்கு குறைகளுடன் கூடியதாகவும், சிலருக்கு நிறைவுடன் கூடியதாகவும், இருப்பதுப்போன்று காணப்படுகின்றது.

எனவே, ஒருவனது மனம் எப்படி பயிற்றுவிக்கப் படுகின்றதோ? அதற்கேற்றாற்ப்போல, அந்த மனிதன் இருக்கின்றான். அதனால், கற்கின்ற கல்வியில் மனதைக் கையாளும் வழிமுறைகளை அவசியம் கற்றுக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து, மனதை தேவையற்ற விசயங்களினால் நிறைக்கப்படும் பொழுது, அது குப்பைகள் கொட்டப்பட்ட குப்பைத் தொட்டியைப் போன்று மாறி, நாற்றமடிக்க ஆரம்பித்து விடும். அதிலிருந்து, நல்ல மணத்தை பரப்புகின்ற நறுமணத்தை எதிர்ப்பார்க்க முடியாது.


மனதில் அறிய வேண்டிய அரிய உண்மைகளை மட்டுமே அறிந்துக் கொள்ள வேண்டும். அனாவசியமான, அவசியமற்ற விசயங்களை சுகம் எனக் கருதி, மனதில் உள்வாங்கும் பொழுது, மனம் அசுத்தமடைவதை தடுக்க முடியாது. அசுத்தமான மனதில் ஆனந்தம் நிலைத்திருக்காது.

ஆனந்தம் நிலைக்க வேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றோம். ஆனால், அதற்கான வழிமுறைகளை மட்டும் யாருமே அறியத் தயாராக இல்லை. இதற்குக் காரணம், நம்மைச் சார்ந்தவர்கள் எத்தகைய மன நிலையில் இருக்கின்றார்களோ, அத்தகைய மன நிலைக்கு நம்மையும் அவர்கள் தயார் செய்கின்றார்கள் என்பதை அறிந்து, அவர்களின் மன நிலையோடு நம்முடைய மன நிலை ஒத்துவந்தால் மட்டுமே பழகுவது நல்லது. இல்லையேல் வீணான மன உழைச்சல்களுக்கு ஆட்படுவதை தவிற்க இயலாது.

வளமான வாழ்க்கையை வாழ விரும்பும் அனைவரும், அதற்கான தகுதிகளை சரியானபடி மனதில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

*வளமான வாழ்க்கை என்பது, வெளியே உள்ள பணத்தில் இல்லை, நம்மிடம் உள்ள மனத்தில் இருக்கின்றது.*

அந்த தகுதிகள் என்பது, மனதிற்கு நன்மையை உண்டாக்கும் விசயங்களை மட்டும் *பார்த்தல், கேட்டல், பேசுதல்* என இருக்க வேண்டும். இதற்கு முற்றிலும் முரணாக, தீயவைகளைப் **பார்க்காமலும், கேட்காமலும், பேசாமலும்** இருக்க பழக வேண்டும்.



மனதில் இவ்வாறு, இந்த மூன்று புலன்களினால் உள் வாங்கப்படும் வேண்டாத விசயங்கள் அந்த மனதை சீரழித்து விடும். அதன்பிறகு, அந்த மனதை நன்மையை நோக்கித் திருப்புதல் என்பது, நடைமுறையில் சாத்தியம் ஆகாது என்பதை அறியவும். அதனால்தான், அன்றைய நம் முன்னோர்கள் மக்களின் மனதில் தேவையற்ற விசயங்களை விதைக்க மாட்டார்கள். விதைப்பவர்களையும் கண்டிப்பார்கள்.

ஆனால், இன்றோ, அனைத்து தரப்பு மக்களும், அவசியமற்ற விசயங்களையே, மிகவும் விஷேசமாக விரும்பி,

தொலைக்காட்சிகளிலும், தொலைத் தொடர்பு சாதனங்களிலும், திரைப்படங்களிலும் மிகவும் திருப்தி யுடன் **பார்த்தும், கேட்டும், பேசியும்** கொண்டிருக் கின்றார்கள். இந்த திருப்தி எதிர்கால சந்ததியருக்கு அதிருப்தியை உண்டாக்கும் என்பதை எவரும் அறிந்துக் கொள்ளத் தயாராய் இல்லை.

அறிய வேண்டிய அரிய உண்மைகள் அனேகம் இருக்கின்றபொழுது, இதுபோன்ற அறியாமைகளிடம் மனம் சிக்கிக்கொண்டிருப்பதை பெரும்பாலானவர்கள் அறியாமல் இருக்கின்றார்கள்.

இந்த அறியாமையை இவர்களுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், தன்னுடைய குழந்தைகளுக்கும், உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் என பரப்புகின்றார்கள். இது ஒரு தொற்று நோய்க் கிருமி என்பதை அறியாமல், பலரிடம் இது தொற்றிக் கொண்டிருப்பதை, பல வருடங்கள் கழித்து அறியும் பொழுது, இனி அறிவிப்பதற்கு ஆட்கள் அங்கே இருக்க மாட்டார்கள். எனவே, நவீன விஞ்ஞானத்தின் விபரீத விளையாட்டு சாதனங்களான வீடியோ கேம்ஸ், வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி, தொலைத் தொடர்பு சாதனங்கள், போன்றவைகளை நம்மிடமிருந்து தொலைத்து விட்டாலே போதும், நம்முடைய தொலை நோக்குப்பார்வை விழித்துக் கொள்ளும்.

# 6. பேச்சும், மூச்சும்

ஒருவன் பேச்சின்றி, மனமின்றி, மயக்கமடைந்து விழுந்திருக்கும் பொழுது, அவனை பேச்சு, மூச்சு இல்லாமல் கிடக்கின்றான் என்று கூறுவார்கள்.

பேச்சுக்கும், மூச்சுக்கும் அப்படி ஒரு சம்பந்தம் இருக்கின்றது. எப்பொழுதும் அதிகம் பேசிக்கொண்டு இருப்பவன் அதிக மூச்சை செலவு செய்கின்றான். பேச்சையும், மூச்சையும் அதிகம் செலவு செய்பவன் மனதை அதிகம் பயன் படுத்துகின்றான். மனதை அதிகமாக பயன்படுத்தப்படும் பொழுது, அவனது சீரிய சிந்தனை ஆற்றல் குறைகின்றது.

எப்படி?

ஒருவன் தன் நண்பனுக்கு குடிக்க ஒரு டம்பளர் நிறைய நீரை எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கின்றான். அவன் நண்பன் அந்த டம்பளர் நீரைப் பார்த்து விட்டு, இது எனக்குப் பத்தாது, இன்னும் நிறைய வேண்டும் என்று கேட்கின்றான். அவன் அப்படி கேட்கின்றான் என்பதற்காக அந்த டம்பளரில் மேலும் நீரை நிரப்ப முடியுமா? அப்படித்தான்

நிரைக்க முயன்றாலும் அந்த நீர் வழிந்து டம்பளரை விட்டு வெளியே வந்து விடும் அல்லவா?

எனவே, அவன் நண்பன் அந்த நீரைக் குடித்து விட்டு, டம்பளரை காலி செய்துக் கொடுத்தவுடன் மட்டுமே மீண்டும் ஒரு டம்பளர் நீரை அவனுக்கு கொண்டு வந்து கொடுக்கலாம்.

இதுப்போலத்தான், மனதின் நிலையும் ஆகும்.


அதாவது, டம்பளரில் பிடிக்கும் கொள்கலன் அளவுக்கு மேலாக, நீரை சேகரித்தால் அது எப்படி நிரம்பி வழியுமோ, அதுப்போன்று நல்ல விசயங்களை மட்டுமே, மனதில் அளவாக சேகரித்துக் கொண்டு வர வேண்டும்.

அதைவிடுத்து, அதன் கொள்கலன் சக்தி பெரிதாக இருப்பதாக கருதிக் கொண்டு, மேலும், மேலும் விசயங்களை மனதில் திணித்துக் கொண்டே இருந்தால், இதில் மனம் நிரம்பி வழிவது என்பது, சேகரிக்கப்பட்ட விசயங்களை **வாய் வழியாக பேச்சாக** வெளிப்படுத்து கின்றது என்பதை அனைவரும் அறிய வேண்டிய அவசியமான உண்மையாகும்.

எப்பொழுதும் எதையாவது பேசிக்கொண்டு இருப்பவன், அதிகம் மனதினை உபயோகிக்கின்றான் என்பதை அறிய வேண்டும்.

பேச்சைக் குறைத்தவன், மூச்சை சரியாகக் கையாளுகின்றான். அவனே, மனதை தேவையான பொழுது மட்டுமே பயன்பாட்டில் கொண்டு வருகின்றான்.

மனதிற்கும் மூச்சிற்கும், பேச்சிற்கும் ஒரு முக்கோணத் தொடர்பு இருக்கின்றது.




அதாவது, இவைகள் ஒன்றை ஒன்று சார்ந்து செயல் படுகின்றது. பேச்சு குறையும் பொழுது, மூச்சு கட்டுப்பாட்டில் இருக்கின்றது. மூச்சு கட்டுப்பாட்டில் இருப்பின் மனம் கட்டுப்படுகின்றது.

எண்ணங்கள் எழும் பொழுது, சிலர் மூச்சைக் கவனிக்கச் சொல்வதின் நோக்கம் இதுதான், அதாவது, மனதில் எண்ணங்கள் உண்டாகும் பொழுது, மூச்சைக் கவனிப்பவன் நிகழ்காலத்தில் இருக்கின்றான். அப்படி அவன் நிகழ் காலத்தில் மூச்சைக் கவனித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும், அவன் மனம் அடுத்த எண்ணங்களை எழுப்பாமல் அடங்கி விடுகின்றது. மனம் தற்காலிகமாக இவ்வாறு அடங்குவதால் பேச்சும் தற்காலிகமாக அடங்கி, மூச்சும் ஒரே சீராக இருக்கும்.

பொதுவாக, மூச்சை அடக்கும் பிராணாயாம பயிற்சிகள், மனதை அடக்க மூச்சை கவனிக்கும் பயிற்சிகள், என எதை எடுத்துக் கொண்டு நடைமுறையில் நாம் பயின்றாலும், அந்த பயிற்சியினால் எண்ணங்களை தற்காலிகமாக எழ விடாமல், மனதையும், பேச்சையும் தற்காலிகமாக நிறுத்த முடிவது உண்மையே.

ஆனால், இந்த பயிற்சியின் முடிவில், மீண்டும் மனம் பல்வேறு எண்ணங்களினால் சூழப்பட்டு, பழையபடி அங்கும், இங்கும் அலைய ஆரம்பிக்கும். மேலும், இந்த மூச்சை அளவாக உபயோகித்து, அடக்கி, உடலை நீண்ட காலம் தக்க வைத்துக் கொள்ளலாம் எனக்கருதி சிலர் பிராணாயாம பயிற்சிகளை மேற் கொள்கின்றனர். இதனால், உடல் நோய் இன்றி சில காலம் நீடிக்கும் என்பதும் உண்மையே.

அதேசமயம், இந்த மூச்சுப் பயிற்சிகளினால் மனம் நிரந்தரமான கட்டுக்குள் வராத காரணத்தினால், மனதில் இருந்து வெளியேறாத எண்ணங்களின் காரணமாக, இவர்களும் மனம் போன போக்கில் போய்க் கொண்டுத்தான் இருக்கின்றனர்.

பொதுவாக, உடலை நீண்ட காலம் வைத்திருந்து, வாழ வேண்டும் என்ற அவசியத்தை நாம் சரியாக அறிந்துக் கொள்ள வேண்டும். உடல் நீடிப்பதினால், மனமும் நீடிக்கும், மனம் நீடிப்பதினால், எண்ணங்களும் நீடிக்கும். எண்ணங்கள் நீடித்திருக்கும் வரை நிம்மதி என்பது இருக்காது.

நாம் விரும்புவதோ, நிம்மதியை, உண்மையான மன மகிழ்ச்சியை மட்டும்தானே! அதற்காகத்தானே நாம் கல்வி, பணம், வீடு, வாசல், உறவுகள், நண்பர்கள் என்று அனைத்தையும் பிடித்துக் கொண்டு இருக்கின்றோம்.

ஆனால், உண்மையில் இவைகளைப் பிடித்துக் கொண்டுள்ளோம் என்பதை மனதினால் விசாரித்து அறிந்து, இவைகளை மனதளவில் விட்டு விட்டால் மட்டும் போதும், அனைத்து ஆனந்தமும் நம் மனதில் குடி கொள்ளும்.

அதிகமான விசயங்களை மனதில் ஏற்றிவைத்துக் கொண்டு, அவைகளை பிடித்துக் கொண்டிருக்கும் வரை, ஆனந்தம் முற்றிலும் மனதில் இருந்து மறைந்து விடுகின்றது. அடக்கப்பட்ட அனேக எண்ணங்களை அவ்வப்பொழுது, வெளிக் கொண்டுவர மனம் எதையாவது செய்ய வேண்டும் என துடிக்கின்றது. அதனால், அவனை செயலில் ஈடுபடுத்திக் கொண்டே இருக்கின்றது.

அவ்வாறு எழும் எண்ணங்கள் நன்மையாக இருப்பின், அந்த எண்ணங்களின் உத்வேகமான எழுச்சியினால், அதுவும் செயலாக மாறி, அதன் வாயிலாக பல நன்மைகள் இந்த சமுதாயத்திற்கு உண்டாகும். தீமையாக இருப்பின் அதன் வாயிலாக பலத் தீமைகள் இந்த சமூதாயத்திற்கு உண்டாகும்

பொதுவாக, செய்யப்பட்ட செயல்கள் நன்மையோ, தீமையோ, அதன் விளைவுகள் மனதிற்கு இன்பத்தையோ, துன்பத்தையோ கொடுத்து, அந்த மனிதனை மனம் கடந்த *மெய்யறிவு* நிலைக்கு அழைத்துச் செல்லாது. மெய்யறிவு நிலை என்பது மனமற்ற நிலையில் மனிதனுக்கு உண்டாவது.

அதனால்தான் அதன் மகத்துவத்தை அனைவராலும் அனுபவப்பட முடியாமல் இருக்கின்றது. இங்கு கூறவருவது, மனதின் நல்ல எண்ணங் களினால் விளையும், சமுதாய

நன்மைகளை விட, மெய்யறிவின் பிரகாசத்தினால் விளையும் உலக மக்களின் *ஒட்டுமொத்த நன்மைகளை* கொடுக்கும், அறிவை நாம் அறிய வேண்டும் என்பதே ஆகும்.

இதற்காக நாம் செய்ய வேண்டியது எண்ணங்களை விசாரித்து, அதன் அபரிமிதமான விருத்திகளை வெளியில் கொண்டு வந்து செயல்களாக மாற்றும் முன்னரே, மனதில் உதிக்கின்ற அந்த எண்ணத்தை அந்தக்கணத்திலேயே, நிகழ்காலத்தில் நின்று கவனிக்கும் பொழுது, அடுத்த எண்ணம் எழுவது தடுக்கப்படுகின்றது.

அதாவது, எப்பொழுதும் நிகழ்காலத்தில் இருந்துக் கொண்டு, எண்ணங்கள் எழுவதை கவனிக்கும் பொழுது, அதன் ஒரே பலன், மனம் நிர்விகல்பம் ஆகிவிடும். இந்த நிலையில் **'அறிவு'** பிரகாசிக்க ஆரம்பிக்கும்.

இது ஒன்றே உண்மையை அறியும் உன்னதமான அனுபவம் ஆகும். இதை அன்றாட வாழ்வில் இயல்பாக நடைமுறையில் செய்யலாம். இதை பயிற்சி என்று எடுத்துக் கொண்டு, குறிப்பிட்ட நேரம் மட்டும் செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை.

தன் இயல்பில் எப்பொழுதும் நிகழ்காலத்தில் இருந்துக் கொண்டு, விழிப்பு நிலையிலேயே இதை அனுதினமும், அந்த விநாடிகளை அப்படியே அனுபவமாக கவனிக்கும் பொழுது, அந்த **'மெய்யறிவை'** நம்முள்ளே நாம் காணலாம்.

நாம் காணும் காட்சி, கேட்கும் சப்தம், நுகரும் மணம், ருசிக்கும் ருசி, தொடுகின்ற ஸ்பரிசம் என எல்லாமே, அந்த உள்ளுணர்வான மெய்யறிவினால் மட்டுமே அறியப் படுகின்றது என்ற பேருண்மை புரிய ஆரம்பிக்கின்றது.

அந்த அறிவே அனைத்தையும் அறிகின்ற **மெய்யறிவு, ஆன்மா, இருப்பு, உயிர்** என்று பலவாறாக அழைக்கப் படுகின்றது. ஆக, அந்த **'அறிவு'** இல்லையேல், ஒருவனுக்கு பேச்சும் இல்லை, மூச்சும் இல்லை. இதுவரை போற்றிப் பாதுகாத்து வந்த இந்த ஜடமான உடலை, *உண்மை* என்று நம்பிக்கொண்டிருந்த அந்த **மனம்** உடலில் இல்லாமல் போகின்றது.

ஆனால், அந்த மனதின் வாயிலாக சேகரிக்கப்பட்ட பல்வேறு புத்தக அறிவுகளைக் கொண்ட **மூளை** மட்டும் உடலில் இருந்தாலும், **'அறிவு'** இல்லாத காரணத்தினால், எதையும் அறிய முடியாத ஜடம் (சடலம்) என்பதினால், அதை எறிக்கவோ, புதைக்கவோ வேண்டும்.

# 7. காலமும், தேசமும்

மூன்று காலங்களையும் முக்கியமாகக் கருதுகின்ற மனிதன் எப்பொழுது எனக்கு நல்ல காலம் வரும் என்று அடிக்கடி ஜோதிடர்களை சந்தித்து சந்தேகம் கேட்கின்றான்.

மனித வாழ்க்கையின் தலையெழுத்தே, அவன் பிறந்த நேரத்தால்தான் தீர்மானிக்கப்படுகிறது என்பதான ஒரு நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிறக்கின்ற ஒரு மனிதனின் வாழ்வியல் சம்பவங்களை முன்கூட்டியே சொல்லிவிட முடியும் என நம்மில் பலர் அசட்டுத்தனமாக நம்பிக்கையும் கொள்கின்றனர்.

அதன் காரணமாக, ஜாதகத்தையும், ஜோதிடத்தையும் விடாமல் பிடித்துக் கொண்டு, ஒவ்வொரு ஜோதிடர்களின் இல்லங்களுக்கும், அலுவலகங்களுக்குமாக இங்கும், அங்கும் அலைந்துக் கொண்டிருக்கின்றார்கள்.

காலம் மனிதனை அலைக்கழிக்கிறதா? அல்லது காலமெனும் ஒன்றை உண்டாக்கிக் கொண்டு, மனிதன் அலைந்துக் கொண்டிருக்கிறானா?

உண்மையில் காலமென்ற ஒன்று தனித்து இல்லை. நாமே உருவாக்கிக் கொண்ட **மாயக் கண்ணாடி** அது.

தண்ணீரில் தெரியும் தன் பிம்பத்தைக் கண்டு பயப்படும் நரியைப் போன்று அந்தக்கண்ணாடியில் தெரியும் நம் பிம்பத்தைக் கண்டு நாமே பயப்படுகின்றோம்.

காலத்தின் மூலத்தை நம்மால் திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாது. இருப்பினும், விஞ்ஞானம் கூறுகின்ற பெருவெடிப்புக் கொள்கையின் படி பேரண்டம் தோன்றிய கணத்திலிருந்து இன்றையநாள் வரையிலான காலத்தின் மதிப்பு சற்றேறக்குறைய 15 பில்லியன் ஆண்டுகள் எனலாம்.

அதாவது, 1500 கோடி ஆண்டுகள். ஆக, காலத்தின் வயதும் 1500 கோடி ஆண்டுகள் எனச் சொல்லலாம் அல்லவா?

அதற்கு முன்பு காலம் நிச்சயம் இருந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியானால் காலம் நிரந்தரமானதன்று. அதாவது, வந்து போகின்ற நிரந்தரமற்ற காலம் எப்போதும் இருக்கின்ற உண்மையாக இருக்க முடியாது.

காலத்தின் நிலை இவ்வாறு இருக்க, அந்த காலத்தை முன் வைத்து, மனிதன் பயப்படுவதும், நம்பிக்கை இழப்பதும் எப்பேர்ப்பட்ட அறிவீனச் செயல்கள்?

ஒரு மனிதனின் வாழ்வு அவன் தலையெழுத்தைக் கொண்டே அமைகின்றது என, இந்த மனிதச்சமூகம் தொடர்ந்து நம்பி வருகின்றது. தலையெழுத்தை இரண்டு காரணிகள் தீர்மானிப்பதாகவும் அது கருதுகின்றது.

அவைகள், *பிறந்த இடம்* மற்றும் *பிறந்த நேரம்.* பிறந்த நேரம் காலத்தைக் குறிப்பது. பிறந்த இடம் என்பது வெளியின் (Space) பகுதியோடு **'இருப்பு'** கொண்டது.

ஒரு குறிப்பிட்ட மனிதரின் ஜாதகம் என்பது அவர் பிறந்த இடம் மற்றும் நேரத்தைக் கணக்கில் கொண்டே கணிக்கப்படுகின்றது.

முதலில் காலம்தான் (Time) மனிதனைப் பயமுறுத்து கின்றது என்றோம். இப்போது அதனுடன் வெளியின் (Space) குறிப்பிட்ட பகுதியையும் (இடத்தையும்) இணைத்துக் கொண்டு இருக்கின்றோம். அதாவது, ஒரு மனிதனால் *காலத்தையும், தேசத்தையும்* அளவீடுகளாகக் கொள்ளாமல், அவன் **இருப்பை** அடையாளப் படுத்தி விட முடியாது.

காலமும், தேசமும் நம் அனுபவத்திற்கு உட்பட்டது. மனதினால் ஒரு எண்ணத்தை எண்ணி, அதனைக் கவனத்தில் கொண்ட அந்த ஒரு விநாடியை **'காலம்'** என்றும், அவ்வாறு தோன்றிய அந்த ஒரு எண்ணம் மறைந்து, அடுத்த எண்ணம் உண்டாவதற்கும் உள்ள இடைவெளியை **'தேசம்'** என்றும் கொள்ளலாம்.

அந்த **'இருப்பு'**, கால, தேசங்களுக்கு அப்பாற்பட்டது. அதை காலத்தின் (Time) உதவிக் கொண்டோ, அல்லது தேசத்தின் (Space) உதவிக்கொண்டோ அறிந்திட முடியாது.

மனிதன் தன்னை அடையாளப்படுத்தும் விதமாக, தன்னுடைய பிறந்த தினத்தைக் கொண்டாடும் **காலம்** (Time) மற்றும் **இடத்தை** (Place or Space) கணக்கில் கொண்டே நாம் இங்கு விசாரம் செய்வோம்.

உதாரணமாக, ஒரு குழந்தை தாயின் கற்பத்தில் இருந்து பிறக்கின்ற நேரத்தை வைத்து ஜாதகம் கணிக்கப்படுகின்றது. காரணம், அவன், கால, தேசத்துக்குள் வந்து விடுகின்றான் என்பது இவர்கள் கருத்து.

ஒரு குழந்தை உருவாக, முதலில் தந்தையிட மிருந்து வெளிப்பட்ட விந்துவில் இருந்த பல்லாயிரக்கணக்கான

உயிரணுக்களில், ஒரே ஒரு உயிரணு மட்டும் உடல் பெற விரும்பி, தாயின் அண்டத்திற்குள் நுழைகின்றது. இவ்வாறு இது நுழைந்து, அங்கு பிண்டமாக வளர்வதற்கான சக்தியை அவள் உண்ணும் உணவிலிருந்து எடுத்துக் கொண்டு, அந்த தாயின் கற்பத்தில் 10 மாதங்கள் இருக்கின்றவரை, அதன் இருப்பிடம் தாயின் உடல். அங்கு, அந்த உடலுக்கு ஏற்ற வேறு உலகம்.

அதன்பிறகு, வயிற்றில் இருந்து ஒரு நாள் முழு உடல் எடுத்து வெளிப்பட்ட பொழுது, 2 அல்லது 3 கிலோ எடைக்கொண்ட ஒரு சிறு குழந்தையாக வெளிப்பட்டது. இங்கு அதற்கு வேறு உலகம். அதாவது, நாம் வசிக்கும் இந்த உலகம். இந்த உலகத்தில்தான் அந்த குழந்தை வெளிப்பட்ட நேரத்தை வைத்து, ஜாதகத்தைக் கணித்து, அந்த குழந்தையின் எதிர்காலத்தை கூறுகின்றார்கள்.

இதுதான் அந்த குழந்தையின் பிறப்பு என்றால், இதற்கு முன்பு தந்தையின் உடலில் இருந்து விந்துவில் வெளிப்பட்ட பிறப்பையும், அந்த சூக்குமமான உடலையும் எந்த கணக்கில் எடுத்துக் கொள்வது?

அடுத்து, பரு உடல் எடுத்த பின்புதான் கணக்கு என்று கூறுவதாக இருந்தாலும், அது தாயின் வயிற்றிற்குள்ளேயே

உடலை எடுத்துக் கொண்டு, அந்த உலகத்தில் 10 மாதங்கள் வாழ்கின்றதே அதை எந்த கணக்கில் எடுத்துக் கொள்வது?

இந்த உலகத்தில் உடல் எடுத்து வந்த பிறகுதான், இந்த உலகத்தின் கால, தேசங்களுக்கு உட்பட்டு, அதற்கேற்றாற் போல அந்த குழந்தைக்கு ஜாதகம் கணிக்கப்படுகினறது என்றாலும், அந்த நேரமும், காலமும், அந்த குழந்தையின் உடலுக்கா, அல்லது ஆன்மாவிற்கா?

ஆன்மாவிற்கு ஜோதிடம் தேவையில்லை. இடையில் வந்துப் போகும், இந்த உடலுக்கு மட்டும் ஜோதிடம் எழுதுவதினால் என்ன பயன்?

உண்மையில், படைக்கப்பட்ட எதுவும், படைப்பிற்கு முன்பும் இல்லை, படைப்பிற்கு பின்பும் இல்லை. இடையில் சில காலங்கள் இருந்துவிட்டு, பிறகு மீண்டும் இல்லாமல் போகின்றது. இந்த இடைப்பட்ட காலத்தில் அது இருப்பதை வைத்து, அதற்கு ஜோதிடம் கூறுவது என்பது கால, தேசத்தை அறியாதவர்களின் அறியாமை எனலாம்.

இது உடல் எடுத்த காரணமே, ஏற்கனவே காரண தேகத்தில் சேகரித்து வைக்கப்பட்ட அனேக கர்ம வினைகளை

இந்த பூமிக்கு கொண்டு வந்து, அனுபவிப்பதற்காக மட்டுமே உடல் எடுக்கின்றது.

இவ்வாறு, அது கொண்டு வந்த கர்ம வினைகளின் பதிவுகளுக்கு ஏற்ப, அதன் உடலும், உறவுகளும், இந்த உலகமும் இருக்கும் பொழுது, அதை மாற்றும் அதிகாரம் அந்த ஆண்டவனுக்கே இல்லை. இதில் இவர்கள் யார்? இந்த இடைப்பட்ட காலத்தில் வந்து, போகின்ற உடலின் **'இருப்பை'** இடையூறு செய்வதற்கு?

வந்து, போகின்ற உடலில், அதன் அனுபவங்களை ஏற்கனவே முடிவு செய்துதான், இந்த உலகத்திற்கு உடல் எடுத்து வருகின்றது. வந்த காலம் முடியும் வரை இந்த உலகத்திற்கு எந்த நோக்கத்திற்காக வந்ததோ, அதை அது செய்யப் போகின்றது.

அதை மாற்றும் வழிமுறைகளைக் கூற, இவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது?

படைப்பின் நோக்கம் அறியாத காரணத்தி னால்தான், படைக்கப்பட்ட உயிரினங்களின் உன்னத வாழ்க்கை முறையை மாற்றுவதற்கு விஞ்ஞானிகள் முயற்சிப்பதுப் போன்று, இந்த அஞ்ஞானிகளும் முயற்சிக்கின்றார்கள்.

காலத்தைக் கடந்த அந்த **'இருப்பு'** எது? என்று உணராதவரை, இந்த மனிதன் அறியாமையில் இருந்து விடுபட முடியாது. அந்த வகையில் இந்த ஜோதிடத்தை உண்மை என்று உரைப்பவன், மூன்று காலங்களிலும் சிக்கிக் கொண்டுள்ள தன் உடலை வளர்க்க, பிறர் உடலுக்கு ஜாதகம் கணிக்கின்ற காரியத்தைச் செய்கின்றான். இவனுக்கு இறைவன் அருள் கிடைக்காது என்று வள்ளுவரும் வருத்தப்படுகின்றார்.

அதாவது, தன் உடலை வளர்க்க, பிறிதொரு உடலை உண்பவனுக்கு, இறைவனது அருள் எவ்வாறு கிடைக்கும் என்பதில், பிற உடல்களை உண்பது மட்டும் அல்ல. பிறரின் வயிற்றில் அடித்து சம்பாதிப்பதும் அடங்கும்.

பொதுவாக வந்து, போகின்ற எந்த ஒரு பொருளும் உண்மை இல்லை. அன்றும், இன்றும், என்றும் இருக்கின்ற ஒன்று மட்டுமே உண்மை. அதுவே, **'இருப்பு'**. அதுவே, எப்பொழுதும் இருப்பது. அதுவே, கால, தேசத்திற்குக் கட்டுப்படாதது.

*ஆக, காலமும், தேசமும் மனிதனின் மனதில் மட்டுமே உள்ளது. வெளியில் இல்லை.*

உடல் எடுத்து வந்த குழந்தை, அந்த உடலை விட்ட பிறகு, அதன் உண்மை நிலை என்ன?

விஞ்ஞானக் கூற்றுப்படி பார்த்தாலும் பெருவெடிப்பு நிகழ்வதற்கு முன் *காலமும், இடமும்* (வெளியின் பகுதிகள்) எங்கும் இல்லை. அப்போது இருந்தது ஒன்றே ஒன்றுதான். அதுவே, *வெட்டவெளி* என்ற **'இருப்பு'**. அந்த ஒன்றெயாகிய **'இருப்பு'** எல்லாக் காலங்களிலும் இருக்கின்றது.

அது பெரு வெடிப்பு நிகழ்வுக்கு முன்பும் இருந்தது. இப்பொழுதும் இருக்கின்றது, இனியும் இருக்கும்.

# 8. காலம் கடந்த வாழ்க்கை

**‘இருப்பதெல்லாம் இறைவனே’** என்று எத்தனை முறை, இந்த மனதிற்கு எடுத்துக்கூறினாலும், அதை புத்தியில் ஏற்பதற்கு மட்டும் மனம் வருவதில்லை. இதற்குக் காரணம், நம்முடைய அறியாமை அத்தகைய மன நிலையில் நம்மை வழி நடத்துகின்றது.

இருப்பது ஒன்று மட்டுமே என்றும், அதுவே, எங்கும், எதிலும் நிறைந்திருக்கின்றது என்றும், அதை ஆனந்தமாக அனுபவிக்க முடியும் என்றும், எத்தனையோ மகான்கள் இந்த மண்ணிற்கு வந்து எளிமையாக எடுத்துக் கூறி, அதனை தானும் அனுபவித்து, ***‘யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்’*** என்று அதை அனுபவிக்கும் வழி முறையை அனைவருக்கும் கூறி, வாழ்ந்துக் காட்டிச் சென்றிருக் கின்றார்கள்.

**“நான் இருக்கின்றேன்”** என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வாய்ப்பில்லை. இருப்பதினால்தான் இந்த நூலை தற்பொழுது படித்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நூலை படிப்பது என்பது, உடல் சார்ந்த கண்கள் (புலன்) வழியாக படித்துக் கொண்டிருப்பதினால், படிக்கின்ற இந்த உடல்தான் **"நான்"** என்றும், ஆகவே, **"நான் இருக்கின்றேன்"** என்றும் தவறான எண்ணத்தை மனதில் விதைத்துக் கொள்கின்றோம்.

இந்த நூலை படித்துக் கொண்டிருக்கும் நீங்கள் உள்ள அறையில், திடீர் என்று மின்சாரம் துண்டிக்கப்பட்டு, அறை முழுவதும் இருள் சூழ்ந்த நிலையில், உங்களது உடலும், உங்களை சுற்றிலும் உள்ள பொருள்களும், என எதுவுமே தெரியாத இருண்ட சூழ்நிலையில்கூட, **"நான் இருக்கின்றேன்"** என்று உங்களால் உணர முடியுமானால், இங்கு கூற வருகின்ற உண்மை என்னவென்பது உங்களுக்குப் புரிந்து விடும்.

**"நான் இருக்கின்றேன்"** என்பதை உங்களால் எப்படி மறுக்க முடியாதோ, அதுப்போன்று, **"அது இருக்கின்றது"** என்பதையும், அதன் **'இருப்பு'** பற்றியும் உங்களால் மறுக்க முடியாது.

அதாவது, காலையில் கண்விழித்து காணுகின்ற காட்சிகள், காதுகளினால் கேட்கின்ற சப்தங்கள், மூக்கினால் முகருகின்ற மணங்கள், நாக்கினால் சுவைக்கின்ற சுவைகள்,

தோலினால் தொடுகின்ற ஸ்பரிச உணர்வுகள் அனைத்திலும், இந்த ஐம்புலன்களின் அறிவினால் உண்டான அனுபவங்கள் அத்தனையும் அந்த ஒரே இருப்பினை உணர்வதற்கான ஒரு **'மாதிரி'** (Sample) என்றால், அது மிகையாகாது.

அந்த இருப்பை, இந்த *புலன் அறிவுகளால் அறிய முடியாது* என்கின்ற பொழுது, அது எப்படி சாத்தியமாகும் என்ற சந்தேகம் அனைவருக்கும் வருவது இயல்பு.

இங்கு அறியப்பட வேண்டிய மிகப்பெரிய **'உண்மை'** என்னவெனில், அது இருப்பதினால்தான், இந்த புலன்களின் வாயிலாக அனைத்தையும் நாம் அறிகின்றோம். அந்த **'இருப்பு'** இல்லையேல், இந்த புலன்கள் இருக்கின்ற உடல் இருந்தும் பயனில்லை. இது ஜடம் (சடலம்) என்பதை மறந்து விடக்கூடாது.

அனைத்தையும் அறிகின்ற **'அறிவு'** ஒன்று உண்டெனில், அது, அந்த **'இருப்பு'** மட்டுமே ஆகும்.

அந்த இருப்பு, கால, தேசங்களுக்கு அப்பாற்பட்டது. அதை காலத்தின் (Time) உதவிக் கொண்டோ, அல்லது தேசத்தின் (Space) உதவிக்கொண்டோ அறிந்திட முடியாது.

அப்படியானால், நான் கால தேசத்தில் அல்லவா சிக்கிக் கொண்டுள்ளேன். நான் எப்படி அதை அறிய முடியும் என்ற அங்கலாய்ப்பு உங்களிடம் எழுவதை அறிய முடியாமல் இல்லை.

பொறுமை அவசியம்!

காலையில் கண்விழித்தவுடன், காணுகின்ற கல், மண், கடவுள்சிலை, எனத் தொடங்கி, புல், பூண்டு, புழு, பூச்சி, எறும்பு, பாம்பு, பறவை, மிருகம் மற்றும் மனிதன் என்று இந்த மொத்த பிரபஞ்சமும் அந்த **'இருப்பு'** ஒன்றை மட்டுமே ஆதாரமாகக் கொண்டுதான் இருக்கின்றது.

*"மற்ற உயிரினங்களில் இருந்து மனிதன் மாறுபட்டு வாழ்வது என்பது, ஒவ்வொரு கணத்தையும் அப்பொழுதே அனுபவிப்பது என்பதாகும். அதாவது* ***'இருப்பு'*** *என்ற ஒன்றை அறிந்து, அதன் இருப்பில் நின்று வாழ்வதாகும். அந்த இருப்பை இழக்கும் ஒவ்வொரு கணமும், வாழ்க்கையை இழக்கும் இழப்பு எனப்படுகின்றது".*

ஒவ்வொரு கணமும் வாழ்க்கையை வாழ்வது என்பது, ஒவ்வொரு கணமும் **'இருப்பு'** இருப்பதை உணர்வது ஆகும்.

அதாவது **‘இருப்பை’** உணர்வதுதான், அதனை ஊர்ந்து கவனிப்பது மட்டும்தான்.

ஆனால், நாம் கவனிப்பது இல்லை. எதையுமே அதன் **'இருப்பு’** என்ற இயல்பில் இருந்து கவனிப்பது இல்லை. காலமும், தேசமும் நம்மால் கவனிக்கப்படுவதுப் போன்று, நாம் இருப்பை கவனிப்பது கிடையாது.

**“இருப்பு என்பது எப்பொழுதும் இருப்பது”.**

உதாரணமாக, ஒரு ரோஜா மலரைப் பார்க்கின்றோம். அதற்கு என்று ஒரு பெயர், உருவம், மணம் இருக்கின்றது, மேலும், அதில் ஒரு மென்மை என்ற குணமும் இருக்கின்றது.

இதுப்போன்று ரோஜாவின் அத்தனை குணங்களையும் நாம் அறிந்திருந்தாலும், அதன் **‘இருப்பு’** எதனால் உண்டானது என்பதை அறிந்துக் கொள்ள ஆர்வம் இன்றி, அதனைப் பறித்து தலையில் வைப்பது மட்டுமே நம்முடைய தலையாய நோக்கமாக இருக்கின்றது. இதற்குக் காரணம் நம் மனம்.

*"மனம் என்பது, கடந்த காலத்து நினைவிலோ, அல்லது எதிர்காலத்துக் கனவிலோதான் எண்ணங்களாக நின்று*

*கொண்டிருக்கும் இயல்பு உடையது. ஆனால், அதே மனதிற்கு நிகழ்காலத்தில், '**இருப்பில்**' இடம் கிடையாது."*

*"ரோஜா மலர் என்று கூறியதுமே, அந்த மலரைப் பற்றிய '**அறிவு**' மட்டுமே வரலாம். ஆனால், அந்த மலர் இருக்கின்றது என்று தெரிய, மலரின் '**இருப்பு**' அறியப்பட வேண்டும்".*

பொதுவாக, நாம் ***'இருக்கிறது'*** என்று பார்க்கின்ற ஒவ்வொரு பொருளுக்கும் **'இருப்பு'** என ஒன்று இருக்கின்றது.

அந்த **'இருப்பு'** என்பதுதான் மலரின் இருப்பை நமக்கு உறுதி செய்கிறது. இல்லை என்றால், மலர் என்பது வெறும் ஒரு வார்த்தையாக மட்டுமே இருக்கும்.

உதாரணமாக, ஒரு மலர் இருக்கிறது, ஒரு குருவி இருக்கிறது, ஒரு புத்தகம் இருக்கிறது, அவர் இருக்கிறார் என எதனை எல்லாம் நாம் தெரிந்து கொண்டாலும், **'இருப்பு'** என்பது மட்டுமே அவற்றின் இருப்பினைத் தருவது என்பதை அவசியம் அறிய வேண்டும்.

அந்த **'இருப்பு'** இல்லை என்றால், அது வெறும் சொல் மட்டுமே ஆகும்.

*ஆம்! '**இருப்பு**' என்பதுதான் **existence.***

அந்த **'இருப்பு'** எல்லாவற்றிலும் ஒன்றுதான். ஒவ்வொரு பொருளுக்கும் மாறுபட்டதல்ல. இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

*பெயர், உருவம், குணம்* என இவைதான் மாறி மாறித் தோன்றுகின்றதே ஒழிய, அவற்றின் **'இருப்பு'** எப்பொழுதுமே மாறவில்லை.

*பெயர், உருவம், குணம்* நமக்கு முக்கியம் இல்லையா?

அவற்றின் வேறுபாடுகளினால்தானே நாம் இந்த உலகத்தில் உள்ள பொருட்களை, விஷயங்களைக் கையாள முடிகிறது! என்ற சந்தேகம் உங்களுக்கு வருவது இயல்புதான்.

நீங்கள் கேட்பதும் நியாயம்தான். எல்லாமும் முக்கியம் தான்.

ஆனால், நாம் எல்லாவற்றையும் **பெயர், உருவம், குணம்** என்ற அடிப்படையில் மட்டுமே காணுகின்றோம். அதாவது *பெயர், உருவம், தன்மை* என்ற நோக்கத்தில் மட்டுமே பார்க்க நம்மைத் தயாராக்கிக் கொண்டுள்ளோம்.

அதனால்தான், நம் புலனறிவால் அறிய முடியாத எதுவும், **‘இருப்பு’** இல்லை எனத் தவறாக கருதுகின்றோம்.

அதற்குக் காரணம், நம்முடைய அறியாமை.

*"ஒருவருக்கு எதையும் முகர்ந்து அறிகின்ற உணர்ச்சி இல்லை என்று வைத்துக் கொள்வோம். அதனால் அவர் இந்த ரோஜாவுக்கு மணம் இல்லை எனக் கூற முடியுமா?"*

நிச்சயமாக முடியாது! காரணம், அவருக்குத்தான் அதை அறியும் புலன் அறிவு இல்லையே!

இதனால், புரிந்துக்கொள்ள வேண்டியது விசயம் என்னவெனில், *'புலனறிவால் அறிய முடியாது என்றாலும்* **‘இருப்பு’** *என்பது ஒவ்வொரு பொருளுக்கும் இருக்கிறது'* என்பதே ஆகும்.

அதாவது, *பெயர், உருவம், தன்மை* முதலியன எப்போதும் மாறிக் கொண்டே இருந்தாலும், எல்லாப் பொருட்களுக்கும் ஆதாரமாக மாறாமல் உள்ளது **‘இருப்பு’** மட்டும்தான்.

ஆகவே, இந்த **'இருப்பு'** எதுவோ அதில்தான் நம்முடைய கவனம் ஒவ்வொரு கணமும் இருக்க வேண்டும். மற்றதெல்லாம், அந்த **'இருப்பு'** விளையாட்டாக எழுப்புகின்ற தோற்ற மாயைதான். இந்த அணுகு முறையை நீங்கள் எடுத்துக் கொண்டால், நீங்கள் எல்லாவற்றையும் பார்ப்பவராக ஆகிவிடுவீர்கள்.

*"ஒரு ரோஜா மலரில்* ***'இருப்பு'*** *இருப்பதை கவனத்துடன், நிகழ்காலத்தில் நின்று நீங்கள் பார்க்க ஆரம்பித்தால், அதன் குணங்கள் எல்லாவற்றையும் இரசித்து ஏற்பவராக ஆகி விடுவீர்கள். எந்த மாற்றத்தாலும் பாதிக்கப்படாத சாட்சியாக மட்டுமே நீங்கள் இருப்பதை உணர்வீர்கள். எல்லாவற்றிலும் திடீரென்று ஒர் புனிதத்தன்மை வந்திருப்பதாக உணர்வீர்கள்."*

வெறும் சாட்சியாகப் பாருங்கள்.

அதாவது, இருப்பதெல்லாம் **'இருப்பு'** என்பதாகப் பார்ப்பதால், எல்லாமும் உங்களுக்கு ஆச்சரியமாக, ஆனந்தமாக இருக்கும். வாழ்க்கை ஒரு அதிசயம், எல்லாமே ஒரு மேஜிக் என்பது போன்ற வியப்பும், மகிழ்ச்சியும் இருக்கும். வாழ்வின் ஒவ்வொரு கணமும், அந்த அதிசயத்தை அனுபவிக்கக் கிடைத்த வாய்ப்பு எனப் புரியும்.

கவனம் நிகழ்காலத்தில் மட்டும் இருக்கும் பட்சத்தில், நாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற பொருளில் '**இருப்பு**' இருப்பதை அறிவோம்.

ஆனால், மனம் கடந்த, அல்லது எதிர் காலத்திற்கு அலைப்பாய்ந்துக் கொண்டிருந்தால், *மனதின் கட்டுப் பாட்டில் நாம் இருக்கின்றோம்* என்று பொருள்.

நாம் எதனை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமோ அதனைக் கவனிப்பதில்லை என்பதிலிருந்து, நம் மனம் வேறு எதையோ சிந்தனை செய்தவாறு உள்ளது என அறியலாம்.

இவ்வாறு, மனதின் கட்டுப்பாட்டில் நாம் இருக்கும் வரை, நம்மால், '**இருப்பு**' பார்க்கப்பட முடியாத ஒன்றாகவே இருக்கும்.

மனம் புலனறிவினால் தூண்டப்பட்டு, தோற்ற மாற்றங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கும் விசயங்களை உண்மை என நினைத்துக் கொண்டு, அதனால் துயரப்பட்டுக் கொண்டிருப்போம். எனவே, உடனடியாக உங்கள் மனதைக் கழட்டி விடுங்கள்.

எளிமையாக, எல்லாவற்றையும் பார்க்கின்ற சாட்சியாக இருந்து பழகுங்கள். நிச்சயமாக மனதை தேவைப்படும் பொழுது எடுத்துக் கொண்டு, உலகத்தில் செய்ய வேண்டிய செயல்களில் தாராளமாக ஈடுபடலாம். ஆனால் எப்போதும், எல்லாவற்றிலும் ஊடுருவி இருப்பது '**இருப்பு**' மட்டுமே என்பதை மறந்து விடாமல் பாருங்கள். ஏனென்றால் அதுதான் உங்கள் உண்மையான இருப்பு.

*"எந்த இருப்பை அறிந்துக் கொண்டால், அனைத்து இருப்பையும் அறிய முடிகின்றதோ, அந்த '**இருப்பில் இருப்பது**' மட்டுமே இருப்பு".*

இனி, "**இருப்பதெல்லாம் இறைவ(நா)னே!**"

இந்த பிரபஞ்சத்தில் அழியக்கூடிய பொருள் எது?, அழியாத பொருள் எது? என்று தத்துவ விசாரத்தினால், பிரித்து அறிவதே நித்ய, அநித்ய வஸ்து விவேகம் ஆகும். அதாவது, நித்ய வஸ்து பரம்பொருள் மட்டுமே என்றும், அது எக்காலத்திலும் அழிவற்றது, மற்ற அநித்ய பொருள்கள் அனைத்தும் ஒரு காலத்தில் அழியக்கூடியது என்பதை அறிவது மட்டுமே "அறிவு" (ஞானம்) என்கின்றது சாஸ்திரம்.

அதனால்,

சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை
ஆதலால் இந்த நான்கும் அடைந்தவர்க்கு அறிவு உண்டாகும்
நூதன விவேகி உள்ளம் நுழையாது நுழையும் ஆகில்
பூத ஜென்மங்கள் கோடி புனிதன் ஆம் புருடன் ஆமே

– கைவல்ய நவநீதம்.

என்று சாஸ்திரம் கூறுகின்றதே, இதன் பொருள் என்னவென்று பார்த்தோமானால், அழியக்கூடிய தேகத்தில் உள்ள அழியும் பொருள்களான கண், காது போன்ற புறக்கரணங்களை கொண்டும், மனம் போன்ற அந்தக்கரணங்களை கொண்டும் அந்த அழியாப் பரம்பொருளை அறிந்து கொள்ள முடியாது.

ஆனால், விவேகம், வைராக்கியம், சட்கசம்பத்து மற்றும் முமுக்ஷுத்துவம் என்ற இந்த நான்கையும் சாதனங்களாக ஒருவன் அடைந்தான் என்றால், அவனுக்கே அறிவு உண்டாகும். அப்படிப்பட்ட அறிவை அடைந்தவன், பல கோடி ஜென்மங்களில் செய்த புண்ணியத்தின் பலனாக அது கிடைத்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறுகிறது சாஸ்திரம்.

இதிலிருந்து அறிய வேண்டிய அரிய உண்மை என்னவென்றால், பூசை, வழிபாடு, யாக, யக்ஞங்கள், யோகம் போன்ற புறச் சடங்குகளாலும், தியானம், ஜபம், மந்திர

உபாசனை போன்ற அகச் சடங்குகளாலும் அந்த இறைவனை அறிந்து கொள்ள முடியாது.



பிறகு ஏன்? சாஸ்திரத்தில் அதுப்போன்ற கர்ம அனுஷ்டானங்கள் கூறப்பட்டுள்ளது எனில், அவைகள் அனைத்தும் சாஸ்திரத்தை அறியாத சாதாரண பாமர பக்தனுக்காக கூறப்பட்டுள்ளது.

அதாவது, அதிக ஆசைகளினால் அழுக்காகிய அவனது மனம், தூய்மையான மனமாக மாறி, சித்த சுத்தி அடைய வேண்டுமானால், அவனுக்கு சாஸ்திரமும், சத்குருவும் கிடைத்து, அவனது அறியாமைகள் அகற்றப்பட்டு, அறிவு உண்டாகி, அதன்பிறகு அந்த இறைவ(தன்)னை அறிந்துக்

கொள்வதற்காகவே, அனைத்து கர்மங்களும் அவனுக்கு வலியுறுத்தப்படுகிறது.

> ந து மாம் ஸக்யஸே த்ரஷ்டுமநேநைவ ஸ்வசக்ஷுஷா |
> திவ்யம் ததாமி தே சக்ஷு: பஸ்ய மே யோகமைஸ்வரம் ||
> (11–8)

இதையே கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உன்னுடைய ஊனக் கண்களால் என்னைக் காண இயலாது, என்னுடைய (**சாஸ்திர அறிவு - ஞானக்கண்**) ஞானக்கண்ணைத் தருகிறேன், அப்பொழுதுதான் நீ என்னைக் காண இயலும் என்று அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார்.

ஆகவே, இறைவ(தன்)னைக் காண வேதாந்த சாஸ்திர அறிவு அவசியம் வேண்டும். சாஸ்திர அறிவு (ஞானம்) பெற சத்குருநாதர் வேண்டும், சத்குரு நாதர் கிடைக்க, மன அழுக்குகள் நீங்க வேண்டும், மன அழுக்குகள் நீங்க பூஜைகள், மந்திர ஜபங்கள், யாக யக்ஞங்கள் செய்யப்பட வேண்டும். இதையெல்லாம் கிரமமாக (முறையாக) கடந்து வந்தால் மட்டுமே மகத்தான அந்த மெய்ப்பொருள் சித்தியாகும்.

இதில், நாம் ஒவ்வொருவரும் தற்பொழுது எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை எளிதாக அறிய மனதை விசாரித்து விடைக் காண முயலுங்கள்.

# 9. மன அழுக்குகளும், நீக்கமும்

நம்மிடையே உலக பந்தங்கள் என்ற ஆசைகள் இருப்பதால், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற ஆறு விதமான அழுக்குகள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

அதாவது, ஆசை, கோபம், கஞ்சத்தனம், மயக்கம், ஆணவம், பொறாமை போன்ற ஆறு தீயகுணங்களில் சில, சிலரிடம் காணப்படுகின்றன.

இந்த தீய குணங்கள் மிக மோசமான நரகத்தின் நுழைவு வாயில் என்று கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகின்றார்.

த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாஸநமாத்மந: |
காம: க்ரோத ஸ்ததா லோப ஸ்தஸ்மாதேதத்ரயம் த்யஜேத் || (16–21).

அதாவது, நோயை உடையவன் எவ்வாறு மருத்துவ மனைக்குள் அவசியம் நுழைந்தே ஆக வேண்டுமோ?

அதுப்போல, இந்த கெட்ட குணங்களை உடையவன் நரகத்திற்குள் அவசியம் நுழைந்தே ஆக வேண்டும்.

நாம் நரகத்திற்குள் நுழையாமல், நல்ல கதி அடைய வேண்டுமானால், அவசியம் நம்மிடம் ஒட்டிக் கொண்டுள்ள அழுக்குகளை கழுவ வேண்டும்.

இந்த அழுக்கு எங்கு ஒட்டிக்கொண்டிருக்கின்றது தெரியுமா? நம்மிடம் ஏராளமாக ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களாகவும், அதன் காரணமாக அடைந்த அஹங்காரமாகவும் அவைகள் நம் மண்டையில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

அந்த மண்டையை கழுவினால்தான் இந்த மன அழுக்குகள் போகும்!.

அப்படியானால், அதை சாதாரணத் தண்ணீரில் கழுவினால் போய்விடுமா? என்றால், நிச்சயம் போகாது

அப்படியானால், எதில் கழுவலாம்?

அதற்கு, அந்த அழுக்கை நீக்கி சுத்தம் செய்யும் சுத்த நீரையும், அதிகப்படியான அழுக்கைப் போக்கும் அதி அற்புத சோப்பையும் அறிய வேண்டும்.

ஆம், அவைகளே, மந்திர ஜெபம், தியானம், பூசைகள், யாக, யக்ஞங்கள், ஆலய வழிபாடுகள், சாதுக்களின் சங்கமங்கள், சத்சங்கங்கள், பிராணாயாமம், யோகம் என எதை வேண்டுமானால் எடுத்துக் கொண்டு, அதில் அந்த இறைவனின் மீது செலுத்தக் கூடிய அனன்ய பக்தி உண்டாக வேண்டும்.

இவைகளெல்லாம் அதிகப்படியான அழுக்கை நீக்கும் அதி அற்புதமான சோப்புகள் என்றாலும், அந்த சோப்பைக் கொண்டு, நீர் விடாமல், உலர்ந்த நிலையில், வர வர என்று தேய்க்காமல், மென்மையாக நீர் விட்டு தேய்க்க, சற்று சுத்த ஜலத்தையும் உபயோகிக்க வேண்டும்.

அப்பொழுதுதான் அழுக்குகள் முழுமையாக நீங்கும். அதற்கு, அந்த சுத்தமான நீர் எது? என்று அறிந்துக் கொள்ளவும் வேண்டும். பெரும்பாலான மக்கள் வெறும் சோப்பை மட்டும் வைத்துக்கொண்டு, சுத்த நீரின்றி, சுகமாக குளிக்கப் பார்கிறார்கள். அந்த சோப்பை அப்படியே உபயோகப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

அதனால், சோப்பு மட்டும் தலையில் ஒட்டிக் கொள்கின்றது. ஆனால், அந்த தலையில் உள்ள அழுக்குகள் மட்டும் நீங்கியப்பாடில்லை.

அப்படியானால், இதில் எந்த சுத்த நீரையும், ஏகப்பட்ட சோப்புகளில், எந்த நல்ல சோப்பையும் நாம் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிவதற்காக மட்டுமே நன்மை, தீமைகளைப் பகுத்தறியக்கூடிய பகுத்தறிவு நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவே மிகவும் முக்கியம்.

ஒரு நாளாவது இதை யோசித்திருக்கின்றோமா? உண்மையில் நாம் எதற்காக இதைச் செய்கின்றோம்?.

**நம்முடைய உண்மையான நோக்கம் என்ன?**

ஒரு சிலர் கூறலாம்…

மன அமைதி பெற!
மகிழ்ச்சியுடன் இருக்க!
பாவங்கள் நீங்க!
இறைவனை அறிய!
பொருளைப் பெற!
அருளைப் பெற! என்று இப்படிக் கூறிக்கொண்டே போகலாம்.

ஆனால், இதில் எதை அடைய நாம் எப்பொழுதும் ஓடிக் கொண்டிருக்கின்றோமோ?

அது நம்மிடத்திலேயே இருக்கின்றது என்ற உண்மையை உணராததினால்தான், அதைத்தேடி வெளியே அங்கும், இங்கும் என அலைந்துக் கொண்டிருக்கிறோம்.

நம்மிடத்திலேயே அழுக்கும் உள்ளது. அதை தூய்மைப்படுத்தும் அற்புத வஸ்துவும் நம்மிடத்திலேயே உள்ளது.

அதாவது, அழுக்கும், அந்த அழுக்கை நீக்கும் சுத்த நீரும் நம்மிடையே உள்ளது. இதைப் பிரித்து அறிய வேண்டிய விவேகம் மட்டுமே நம்மிடம் இருக்க வேண்டியது மிக முக்கியம்.

நம்மிடத்தில் உள்ள நல்லது, கெட்டதை பிரித்து அறிய என்ன தேவை?

ஏன் நம்மிடத்தில் இருப்பதை நம்மால் அறிய முடியவில்லை?

இங்குதான் நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.




இருப்பது ஒன்று மட்டுமே, அதுவே சத்தியம், நித்தியம், நிர்குணம், நிர்மலம், நிராகாரம், நிரஞ்சனம், பரப்பிரம்மம், பரிபூரணம் என்று இப்படி கூறிக் கொண்டே இருக்கலாம்.

இந்த நாமங்கள் அனைத்துமே, நாம் அந்த இருப்பை அறிந்து கொள்வதற்காக அறிவிக்கின்ற வார்த்தை ஜாலங்கள்.

ஆனால், அந்த வஸ்துவோ உருவமோ, பெயரோ, குணமோ, மனமோ, மலமோ, திடமோ எதுவும் இல்லாத ஒன்றாக இருக்கின்ற பொழுது, அதனை **“நிர்குண பிரம்மம்”** என்று அழைக்கப் படுகின்றது.

நாமம், ரூபம், படைத்தல், காத்தல், அழித்தல், என்ற முத்தொழிகளை புரியும் செயலைச் செய்ய குணங்களுடன் இருக்கின்ற பொழுது அதனை "சகுண பிரம்மம்" என்று அழைக்கப்படுகின்றது.




இவ்வாறு, நிர்குண பிரம்மம், சகுண பிரம்மம் என்று பிரம்மத்தை இரு நிலைகளாக பிரித்துப் பார்ப்பதற்கு அவசியம் இருக்கின்றது.

இருப்பது தங்கம் என்ற ஒன்று மட்டுமே.

அதை வளையல், மோதிரம், கம்மல் என்று பெயரைக் கொடுத்து, வடிவத்தை மாற்றிக் கொடுத்தவுடன் அதற்கு மதிப்பு

கூடி விடுகின்றது. அதன் பிறகு அது அனைவரின் பயன்பாட்டிற்கும் விரும்பப்படுகின்றது.

அதுப்போல, இருப்பது, பிரம்மம் (தங்கம்) ஒன்று மட்டுமே, அதனை குணங்களுடன் மாற்றி செயல் செய்ய வைக்கப்படும் பொழுது, அது படைத்தல், காத்தல், அழித்தல் (வளையல், மோதிரம் கம்மல் போன்று பெயர், உருவம் கொடுக்கப்பட்டு) என்ற மாற்றத்திற்கு உட்படுத்தப்படும் பொழுது, இந்த உலகம் இயங்குகின்றது.



அந்த பிரம்மம் எல்லா உயிர்களினுள்ளும் ஊடுறுவி, பரவி வியாபித்து உள்ளதாலும், அதற்கு மேல் வேறொன்றும் இல்லாததாலும், அதுவே, பலப் பெயர்களிலும், உருவத்திலும் உணர்வாக ஒளிர்கிறது. உலகத்தில் உள்ள பொருட்களைப் பார்த்து, அவைகளை உணரச் செய்வதற்கு ஒருவன் தேவை.

அப்படிப்பட்ட அவன் இருப்பதற்கு முழுமுதற் காரணமே பிரம்மம் (அறிவு) என்பதால், பிரம்மத்தின் உதவியால், அவன் பார்க்கப்படும் மற்றப் பொருட்கள் அனைத்திலும் பிரம்மம் இருப்பதினால் மட்டுமே அவைகளை அவனால் அறிய முடிகின்றது. இதிலிருந்து, பிரம்மம் (அறிவு) மட்டுமே பிரம்மத்தை (அறிவை) அறிய முடியும். ஆனால், பிரம்மத்தைப் பொறுத்தவரை நாமமும், ரூபமும் மாயை எனப்படுகின்றன.
தங்கம் என்ற மூலப் பொருள் இருந்தால்தான் அதற்குச் செய்யவேண்டிய முறையில் எல்லாம் செய்து, ஒரு உருவமும் கொடுத்து ஒரு பெயரும் கொடுக்க முடிகிறது.



தங்கத்தை உருக்கி வளைத்து கைகளில் அணிவதுபோல் அமைத்து அதற்கு வளையல் என்ற பெயரும், மெலிதாக நீட்டி வெவ்வேறு மணிகள் கோர்த்தது போல் செய்து அதற்கு சங்கிலி என்ற பெயரும் கொடுக்க முடிகிறது.

இதிலிருந்து, தங்கம் இருப்பதினால் மட்டுமே தங்கத்தை மற்ற வடிவங்களிலும், பெயர்களிலும் அறிய முடிகின்றது.

தங்கமே இல்லையென்றால், அந்த உருவமும், பெயரும் எப்படி இருக்க முடியாதோ? அதுப்போல, ஒருவன் இல்லை என்றால் பார்ப்பதற்கோ? அனுபவிப்பதற்கோ? உலகமும் இல்லை, அதில் உள்ள பொருட்களும் இல்லை.

அந்த ஒருவன் இருப்பதற்கு மூல காரணமாய் இருப்பது பிரம்மம் என்றால், அந்தப் பிரம்மம் இல்லாதபோது உலகம் இல்லை என்றாகிறது. அதனால் பிரம்மம் சத்யம், பார்க்கப்படும் இந்த உலகம் மித்யா (மாயை) என்று கூறப்படுகிறது.

இந்த அறிவைக் கொடுக்கத்தான் சாஸ்திரமும், சத்குருவும் தேவைப்படுகிறது.

இதை அறிந்த நம் பாரதத்தில் தோன்றிய ரிஷிகள் அடைய முடியாத இந்த மனிதப் பிறவியை அடைந்தும், மற்ற

எந்த ஜீவர்களுக்கும் கிடைக்காத அறிவு கிடைத்தும், அதைப் பயன் படுத்தத் தெரியாத அறியாமையை எண்ணி, மனம் நொந்த மஹான்கள், இந்த ஜீவர்களை கடைத்தேற்ற கொடுத்தவைகளே இந்த வேத சாஸ்திரங்கள்.

இதை உபதேசித்த பல ஆச்சாரியர்களே குருமார்கள்.

இவ்வாறு, தன்னை தன்னில் தானாய் அறிய விரும்பும் முமுக்ஷுவுக்கு சத்குருவின் சந்நிதியில் சரணடைந்ததின் பலனாக, சாஸ்திர விசாரம் உண்டாகி, சாஸ்திரத்தின் வாயிலாக **சிரவண, மனன, நிதித்யாஸனம்** கைக்கூடி, ஆத்மஞானம் கிடைக்கப்பெற்று, பிறவாப் பெருநிலையாகிய மோக்ஷத்தை அறிகின்றான்.

இந்த மோக்ஷம் என்பது எங்கோ இந்த பூமிக்கு தொலைவில் இருக்கும் சொர்க்கலோகம் போன்ற ஒரு புதிய உலகம் என்றும், அதை அடைய வேண்டும், அங்கே சென்று ஆனந்தத்தை அனுபவிக்கவேண்டும் என்றும், ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் பிடியில் சிக்கிய மனிதன் இதுப்போன்ற சிந்தனைகளினால் சிறிய எல்லைக்குள்ளேயே, அந்த அகண்டத்தை அறியாமல் தன் வாழ்வை முடித்துக் கொள்கிறான்.

உண்மையில், மோக்ஷம் என்பது விடுதலை என்பதினால், மனிதன் தன் மனதை தானே விசாரித்து, விவேகத்தை அடைந்து, அதன் வாயிலாக தன் உண்மை சொரூபத்தை அறிந்து, அதில் ஆனந்தத்தை உணர்ந்து, உடல் இருக்கும்வரை இந்த பூமியில் இருந்துவிட்டு, அதன்பிறகு, அந்த அகண்ட அறிவுடன் இரண்டறக் கலத்தல் என்பதே ஆகும்.

இந்த உண்மையை உணர்ந்தவனே உத்தமன் என்பதைத்தான் அவ்வை பாட்டியும் தமது பாடலில்,

‘உடம்பை பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்!’ என்று கூறுகிறார்.

இப்படி சத்தியத்தைக் கூற வருகின்ற சாஸ்திரம் அறியாமல், அதற்கான சத்குருவின் அவசியமும் புரியாமல், ஒருவன் எனக்கே எல்லாம் தெரியும் என்று ஆணவத்தில் அனைத்தையும் அறிய முயன்றால், அதைவிட விபரீதம் வேறெதுவும் இல்லை.

ஆம்! காரணம்,

ததேஜதி தன்னைஜதி தத்தூரே தத்வந்திகே |
ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத: (5)

ஈசாவாஸ்ய உபநிஷதம் ஸ்லோகம் கூறுகின்றது.

இந்த பிரபஞ்சத்தின் அனைத்து இயக்கங் களுக்கும் ஆதாரமாக இருப்பது ஆன்மா என்பதினால், அது அசைகின்றது. அதுவே, எங்கும் நீக்கமற நிறைந்த நிலையில் உள்ளதால் அதற்கு அசைவில்லை. அது மிக அருகில் உள்ளது. அது அனைத்தின் உள்ளும், வெளியிலும் உள்ளது.

என்ன இது? ஆன்மா அசைகிறது, மிக அருகில் உள்ளது என்று ஒரு இடத்தில் கூறுகிறது, மற்றொரு இடத்தில் ஆன்மாவிற்கு அசைவில்லை, அது தூரத்தில் உள்ளது என்று கூறுகிறது. அடுத்து, உள்ளும் உள்ளது, வெளியிலும் உள்ளது என்று கூறுவதில் இருந்து, இதில் எதை நம்புவது? போன்ற குழப்பங்கள் உண்டாகிவிடும்.

சாஸ்திரம் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களை கூறுகிறதே என்ற சந்தேகம் வந்துவிடும்.

ஆகவே, இதை தக்க சத்குருவின் சந்நிதியில், அவரது நேரடி வழிகாட்டுதலின் படி படிக்கின்றவர்கள் இதுப்போன்ற சாஸ்திரம் கூறவருகின்ற விசயங்களில் குழப்பத்தை அடையாமல், அதற்கான அற்புதமான விளக்கத்தை விளங்கிக் கொள்வார்கள்.



ஆகவே, அதற்கான விளக்கம் என்னவெனில், சாஸ்திரத்தை அறியாத, தத்துவ விசாரத்தில் ஈடுபடாத சாதாரண பாமர பக்தர்களுக்கு பரமன் என்பவன் குணங்களுடன் கூடிய **சகுண பிரம்மம்** என்பதாக மாறி, **பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன்** என **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற மூன்று தொழில்களை புரிகின்றவர்கள் என்பதினால், அவர்கள் அசைவிற்கு ஆதாரமான ஈஸ்வரனாக இருக்கிறார்கள் என்று அறிய வேண்டும்.

அதுவே, சாஸ்திர விசாரம் செய்து தன்னை அறிந்த தத்துவ ஞானிகளுக்கு அதே பரமன் தனித்த, உருவமற்ற, குணங்களற்ற **நிர்குண பிரம்மம்** என்பதால், எல்லையில்லா தனது வைபவத்தினால், எங்கும், எதிலும் நீக்கமற

நிறைந்திருப்பதினால், அசைவற்ற நிலையில் இருக்கிறார் என்பதாக அறிய வேண்டும்.

அந்த நிர்குண வடிவாகிய பரப்பிரம்மம் எல்லையற்ற வெட்டவெளி நிலையில் எங்கும், எதிலும் வியாபித்துள்ளதால், அது அனைவரின் உள்ளேயும் சிதாகாசமாகவும், அகண்ட வெளியில் பராகாசமாகவும் பரவி இருக்கிறது என்பதைத்தான் அது உள்ளும் உள்ளது, வெளியிலும் உள்ளது என்று கூறப்படுகிறது.



# 10.பிரம்மமும், பிரம்மஞானிகளும்

அதுப்போலவே, வேதாந்த சாஸ்திரம், வேத மந்திரம், உபாசனா மந்திரம் போன்ற அனைத்தும் தக்க குருநாதரின் வழிகாட்டுதலுடன் கற்று அதை பயன் படுத்த வேண்டும்.

கர்ம காரியங்களில் (பூசை, யாக யக்ஞங்கள்) உபயோகப்படுத்துகின்ற மந்திரங்களில் உச்சரிப்பு பிழை உண்டாகி விட்டால், அந்த மந்திரத்தின் அர்த்தம் அனர்தமாகிவிடும்.

அதனால், அந்த பூசையின் பலன் நல்லவிதமாக அமைந்து, அதை செய்பவருக்கு புண்ணிய பலன் கொடுப்பதற்கு பதிலாக, பாவப் பலனைக் கொடுத்து விடும்.

அதுப்போலவே, குருவின் வழிகாட்டுதல்கள் இன்றி தானாகவே சாஸ்திரப் புத்தகங்கள், உபநிஷதப் புத்தகங்கள் போன்றவற்றைப் படிப்பது, ஆரம்ப சாதகனுக்கு அதை புரிந்து கொள்வதற்குப் பதிலாக, குழப்பத்தைக் கொடுத்து விடலாம்.

எனவே, எதையும் நன்கு அறிந்த தக்க ஸ்தோத்திரன், பிரம்மநிஷ்டன் (பிரம்மநிஷ்டன் – தன்னை பிரம்மமாக அறிந்து

கொண்ட குரு) ஆகிய சத்குருவின் வழிகாட்டுதலுடன் செயற்படுத்துவது நன்மை பயக்கும். அதாவது, அந்த **"சத்"** என்பதை அறிந்தவனே உண்மையான சத்குரு ஆகும்.

நான் வேறு, இறைவன் வேறு என்று உபதேசிக்கின்ற குரு துவைத மன நிலையில் உள்ளதால், அவரால், பரப்பிரம்ம தத்துவத்தை பாமர ஜனங்களுக்கு புரிய வைக்க முடியாது.

இதில் பாமர பக்தர்கள் என்பவர்கள் தள்ளத்தக்க விசய சுகங்களை தள்ளாமல், சாஸ்திர விசாரணை இல்லாமல், கர்மங்களை செய்துக்கொண்டு, ஈஸ்வரனை எதேனும் ஒரு உருவத்தில் வடித்து, அதற்கு நாம ரூபங்கள் கொடுத்து வழிபாடு செய்கின்றவன் ஆவான். இந்த பக்தனுக்கு அதே இறைவன் பஹிர்யாமியாக எங்கோ வெகு தூரத்தில் இருக்கின்றான்.

அதுவே, சிரவண, மனன நிதித்யாசங்கள் **(கேட்டல், சிந்தித்தல், தெளிதல்)** செய்யும் பிரம்ம ஞானிகளுக்கு அதே இறைவன் அந்தர்யாமியாக அவனுள்ளேயே மிக அருகில் இருக்கின்றான்.

ஆகவே, அந்தப் பரப்பிரம்மம் சகல ஜிவராசிகளின் உள்ளே **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்** என்ற

அந்தக்கரணங்களுக்கு சாட்சியாக தனித்த ஞான சொரூபமாக, ஆத்மாவாக இந்த மாயா பிரபஞ்சத்திற்கு உள்ளும், புறமும் என வியாபித் திருக்கின்றான்.

அப்படிப்பட்ட இறைவன் சுருதியில் வாக்ய ரீதியாக கூறுகின்றான்.

"தஸ்மாத் ஸாகார மநித்யம் நித்யம் நிராகாரமிதி."

(மஹா நாராயணோபநிஷதம்).

பரப்பிரம்மமாகிய என்னை நாம, ரூபங்களில் (பெயர், விக்கிரகம்) வழிபட விரும்பி, என்னுடைய நாமங்களை ராமா, கிருஷ்ணா, கோவிந்தா, கேசவா, மாதவா, மதுசூதனா, புண்டரீகா, பக்தவச்சலா, பரந்தாமா, ஈஸ்வரா, சிவா, விநாயகா, சுப்ரமணியா, பார்வதி, பராசக்தி, லக்ஷ்மி, சரஸ்வதி என்று இன்னும் அனேக பெயர்களும், வடிவங்களும் படைத்து வழிபட்டாலும், இந்த அனைத்து பெயர்களும், விக்கிரகங்களும் பிரளய காலத்தில் முற்றிலும் அழிந்துவிடும்.

ஆனால், பெயர்களும், ரூபமும் இல்லாத வெட்டவெளி நித்தியமாகவும், சத்தியமாகவும் எக் காலத்திலும் இருக்கும்.

இதுவே, என் யதார்த்தமான **நிர்குண சொரூபம்** ஆகும்.

அதாவது, முதல், இடை, கடை இல்லாதவனும், கை, கால், உடல் என அவயங்கள் இல்லாதவனும், பெயர், கோத்திரம், சூத்திரம், ஜாதி, வர்ணபேதம் இல்லாதவனும், ஆண், பெண், அலி என்னும் விகாரங்கள் இல்லாதவனும், ஜனன, மரண, புண்ணிய, பாவங்கள் இல்லாதவனும் ஆகிய என்னை இந்த அழியக்கூடிய புலன்களால் அறிய முயற்சிப்பது, அறியாமையின்றி வேறு என்னவாக இருக்கும் என்று கேட்கின்றார்.

ஆகவே, அப்படிப்பட்ட பரப்பிரம்ம தத்துவத்தை அறிந்த ஞானிகளும் அந்த இறைவனிடம் வேண்டுகின்றார்கள்.

ஐயனே! உருவமற்ற உங்களை எவ்விதம் அறிவேன், எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கின்ற உமக்கு அமருகின்ற ஆஸனம் எப்படி கொடுப்பேன்?

சகஜ சுபாவங்களை உடைய உமக்கு ஹர்க்ய பாத்தியங்கள் (இரண்டு கைகளினாலும் நீர் எடுத்து விடுதல்) எவ்விதமாய் விடுவேன்.

எல்லாவற்றையும் பரிசுத்தம் செய்யும் உமக்கு ஆசமனம் எவ்விதம் செய்வேன். கலங்கமில்லாமல், பரிசுத்தமாக

பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற உமக்கு இங்கு இருக்கின்ற நீரினால் எப்படி குளிப்பாட்டுவேன்.

பிரபஞ்சத்திற்கு எல்லாமாக அதீதமாகவும், அதி சூக்ஷூமமாகவும் எங்கும் பரவிக்கிடக்கின்ற உமக்கு தகுந்த வஸ்திரத்தை எங்கிருந்து கொண்டு வந்து, எவ்விதமாக உடுத்துவேன்.

குலம், கோத்திரம் இல்லாத உமக்கு யக்ஞோப வீதமென்னும் பூணூலை எவ்விதமாய் தரிப்பேன்.

அங்கங்களைக் கொண்ட உடலே இல்லாத உமக்கு அலங்காரம் எப்படி செய்வேன். உருவமற்ற உம்மை எந்த உருவத்திற்கு உண்டான பூசைகளை செய்வேன்.

சூரிய, சந்திரர்களையே பிரகாசிக்கச் செய்யும் உம்முடைய ஒளியின் முன்னாலே நான் எந்த தீபத்தை ஏற்றுவேன். சர்வ பரிபூர்ணமான நித்திய திருப்தியை உடைய உமக்கு சொற்பமான எந்த நெய்வேத்தியத்தை கொடுப்பேன்.

மனோ, வாக்குக்கு அப்பாற்பட்ட உம்மை எந்த மந்திரத்தைக் கூறி உபாசனை செய்வேன்?

# 11. தேகமும், தேகியும்

நாம, ரூபங்களுக்கு அப்பாற்பட்ட பரப் பிரம்மத்தை இனி, எந்த மந்திரத்தைக் கூறி ஜபம் செய்ய முடியும்?

முடியும்.

ஆச்சரியமாக இருக்கின்றதா?

ஆம்! எது, இறைவனது மூச்சுக்காற்றாக, அவனது உள்ளும், புறமும், பரவி அவனை பரவசத்தில் வைத்திருக் கின்றதோ? அதே அவனது மூச்சு, மற்ற அனைத்து ஜீவர்களின் சரிரங்களுக்கும் ஆதாரமாக உள்ளும், புறமும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்த மூச்சுக்காற்று ஒரு லயத்தில் உள்ளும், புறமும் சென்று, வந்து இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அப்படி உள்ளே சென்று விட்டு, சென்ற வழியேலேயே திரும்பியும் வருகின்றது. இவ்வாறு உள்ளே சென்ற மூச்சுக்

காற்று, வெளியே வர வில்லையென்றாலும், வெளியே சென்ற மூச்சுக் காற்று உள்ளே நுழைந்தும் செயல்படவில்லை என்றாலும் அந்த மூச்சற்ற தேகம் ஜடம் என்பதை அறிய வேண்டும்.

காயமே இது பொய்யடா –
வெறும் காற்றடைத்த பையடா
மாயனார் குயவன் செய்த
மண் பாண்டம் ஓடடா!'

என்று சித்தர் ஒருவர் பாடினார்.

இவ்வாறு, ஜடமான ஒன்று காற்றினால் மட்டும் இயங்க முடியும் என்றால், எத்தனையோ ஜடப் பொருட்களில் இதே காற்று உள்ளும், புறமும் சென்று, வந்துக் கொண்டுதான் இருக்கின்றது.

இதுப்போன்று, எங்கெல்லாம் இயக்கம் இருக்கிறதோ? அங்கு நிச்சயமாக அசையும், அசையாப் பொருட்கள் இரண்டும் இருக்கும்.

ஆனால், அவைகளால் ஏன் உயிருடன் இயங்க முடிவதில்லை என்று ஒரு நாளாவது யோசித்திருக் கின்றோமா?

ஒரு அசைவற்ற ஜடப்பொருள் அசையக்கூடிய ஜீவத்துவத்தை அடைய அதன் உள்ளே ஏதோ ஒன்று நிச்சயமாக இருக்க வேண்டும்.

உதாரணமாக, ஒரு ரயில் வண்டி அசைவுடன் இயங்க, அசையாத தண்டவாளங்கள் தேவை.



ஒரு பேருந்து அசைவுடன் இயங்க, அசையாத சாலை இருக்க வேண்டும். ஆனால், அசையாத, அசையக்கூடிய இரண்டு ஜடப்பொருட்களும் தானாகவே இயங்கி விடாது.

அவைகளை இயக்க ஒரு சைதன்யமான ஓட்டுநர் இருக்க வேண்டும்.

அதாவது, ஒரு செயல் நடைபெற வேண்டு மென்றால், அசையும், அசையா இரு ஜடப் பொருட்கள் இருந்தால் மட்டும் போதாது, அவைகளை இயக்க ஒரு இயக்குனரும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

அப்படிப் பார்க்கின்ற பொழுது, இந்த அசையா தேகத்தினை, அசைகின்ற மூச்சுக்காற்று மட்டும் உள்ளும், புறமும் சென்று வந்துக்கொண்டு இருந்தால், இந்த தேகம் இயங்கி விடுமா? என்றால் நிச்சயமாக இயங்காது.

காரணம், செத்த பிணம் என்ற தேகத்தில்கூட, இதே காற்று உள்ளும், புறமும் சென்று வந்துக் கொண்டுதான் இருக்கும்.

ஆனால், மூச்சு மட்டும் இயங்குவதில்லையே. ஏன்?

அசைகின்ற காற்றும், அசையாத தேகமும் இயங்க அதற்கு ஒரு **இயக்குனர்** தேவை.

அவனைத்தான் **பரமா(ஆ)த்மா, பரப்பிரம்மம், இறைவன், பரமன், அறிவு** என்று நாம ரூபங்களை சூட்டி அவனை அழைத்து ஆனந்தப்படுகின்றோம்.

அப்படியானால், இந்த மூச்சுப்பயிற்சி, பிராணாயாமம், அஷ்டாங்கயோகம், வாசியோகம் என்று எத்தனையோ பயிற்சி முறைகளை மனிதர்கள் கையாளுகின்றனரே? அதன் தாத்பரியம் என்ன என்று யோசித்தீர்களேயானால், அந்த பயிற்சிகள் அனைத்துமே இந்த அழியக் கூடிய தேகத்தினை சிறிது நாட்கள் நீடித்து வைத்துக் கொள்ள மட்டுமே பயன்படும்.

ஆனால், என்றாவது ஒரு நாள் இந்த தேகம் (உடல்) அழிந்து விடும்.

சரி!

இறை நாம ஜபம், பூசை, புனஸ்காரங்கள், யாக யக்ஞுங்கள், ஆலய வழிபாடுகள் போன்றவைகள் எதற்காக என்று யோசித்தீர்களேயானால், இவைகள் அனைத்தும் மனதினை செம்மைப்படுத்துவதற்காக மட்டுமே பயன்படும்.

அதாவது, அழியக் கூடிய கண்கள், காதுகள், மூக்கு, வாய், உடம்பின் மேல் போர்த்தப் பட்டுள்ள தோல் போன்ற புறக்கரணங்களைக் கொண்ட இந்த உடல், மற்றும் அழியக் கூடிய அந்தக்கரணங்களைக் கொண்ட மனம், சித்தம், புத்தி அஹங்காரம் போன்றவைகளை செம்மைப்படுத்துவதற்கு மட்டுமே இவைகள் பயன்பாட்டில் உள்ளன.

இந்த இரண்டு காரியங்களினாலும் இவைகளை இயக்குகின்ற இயக்குனரான அந்த பரமா(ஆ)த்மாவை அறிய முடியாது.

உதாரணமாக, வேகமாக ஓடுகின்ற இரயிலைப் பார்க்கின்ற குழந்தை, அந்த இரயிலையும், ரயில் தண்டவாளங் களையும் பார்த்து ஆச்சரியப்படும். எப்படி இந்த இரயில் வேகமாக ஓடுகின்றது என்று வாயைப் பிளந்து வேடிக்கை மட்டும் பார்க்குமே ஒழிய, அதை ஓட்டுகின்ற ஓட்டுனரைப் பற்றி அந்தக் குழந்தைக்கு தெரியாது.

இதில் ஒரு சில புத்திசாலி குழந்தைகள் அதன் அப்பாவிடம் அப்பா! இந்த இரயில் எப்படி இவ்வளவு வேகமாக ஓடுகின்றது என்று கேள்வியை கேட்டவுடன், அந்தக் குழந்தையின் அப்பாவும், இது தானாக ஓடுவதில்லை, இதனை இயக்கும் ஓட்டுனர் ஒருவர் உள்ளே இருக்கின்றார் என்று


விளக்கம் கொடுத்து அந்த குழந்தைக்குப் புரிகின்ற அறிவைக் கொடுப்பார்.

அதுப்போல, சாதாரண பாமர மக்கள் இந்த யோகம், கர்மம், மற்றும் ஜபதபங்களில் சந்தோசத்தை அடைந்து அதிலேயே நின்று விட்டால், அவர்களைப் பற்றி யாரும் கவலைப் படப் போவதில்லை.

இல்லை, இவைகளினால் எனக்கு திருப்தி ஏற்பட வில்லை, இதற்கு மேலாக வேறு ஏதோ ஒன்று இருக்கின்றது. என்று ஆர்வம் கொண்டவர்களை சாஸ்திரம் **“முமுக்ஷு”** என்று அழைக்கின்றது.

அவர்களே அந்த புத்திசாலி குழந்தையைப் போன்று கேள்விகளைக் கேட்டு, சந்தேகத்தை தெளிவுபடுத்திக் கொள்ள, அந்த அறிவான குழந்தை அப்பாவை நாடியதுப் போல, அறிவான இவர்கள் குருவை நாடுகின்றனர்.

அழியக்கூடிய அந்தக்கரணங்களையும், புறக்கரணங் களையும் காப்பாற்ற அறிவுரை கூறும் குருவிடம் சென்றவர்கள், அவரிடம் இருக்கின்ற அதைப் பற்றிய அறிவை மட்டுமே கற்றுக் கொண்டு வந்து செயல்களைச் செய்து, நாளடைவில் சத்து இழந்து செத்தும் போகின்றார்கள்.



ஆனால், என்றும், எக்காலத்திலும் அழியாத ஆன்மாவை அறிந்த சத்குருவை நாடிச் செல்கின்றவர்கள் அழியாத அந்த சைதன்யத்தைப் பற்றி அறிந்ததின் விளைவாக என்றுமே அழியாத பரமா(ஆ)னந்த நிலையை அடைகின்றார்கள்.

ஓம் தத் ஸத்!

# அறிவும் அறியாமையும்



*இந்த அசையா தேகத்தினை, அசைகின்ற மூச்சுக் காற்று மட்டும் உள்ளும், புறமும் சென்று வந்துக் கொண்டு இருந்தால் இந்த தேகம் இயங்கி விடுமா? என்றால் நிச்சயமாக இயங்காது.*

*காரணம், செத்த பிணம் என்ற தேகத்தில் கூட இதே காற்று உள்ளும், புறமும் சென்று வந்துக் கொண்டுதான் இருக்கும். ஆனால், மூச்சு மட்டும் இயங்குவதில்லையே. ஏன்?*

*அசைகின்ற காற்றும், அசையாத தேகமும் இயங்க அதற்கு ஒரு இயக்குனர் தேவை.*

*அவனைத்தான் பரமா(ஆ)த்மா, பரப்பிரம்மம், இறைவன், பரமன், அறிவு என்று நாம ரூபங்களை சூட்டி அவனை அழைத்து ஆனந்தப்படுகின்றோம்.*